திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திப்பு சுல்தான் அவர்கள் மைசூரிலே இருந்து படையெடுத்து வந்த, அந்தப் பாதையிலே பவானிசாகர் அணைக்கட்டு பகுதி அமைந்திருக்கின்றது. திரைப்படம் எடுக்கப்படுகின்ற பிரசித்தி பெற்ற தெங்குமரஹடா பகுதியும், பிரசித்தி பெற்ற கோயில் அமைந்திருக்கக்கூடிய கருவன்ராயகுளத்தில் அமைந்திருக்கக்கூடிய கஜரெட்டி பகுதியும் அந்தப் பகுதியிலேதான் இருக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்கூட ஈரோடு வந்திருந்தபோது, அந்த அணைக்கட்டு பகுதி சுற்றுலாத் தலமாக விளங்குவதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கித் தருவதாக ஒரு கூட்டத்திலே சொல்லியிருந்தார்கள். எனவே அந்த 10 கோடி ரூபாயை ஒதுக்கிக்கொடுத்து, அந்த அணைக்கட்டு பகுதியை அழகுபடுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை 2007 ஆம் ஆண்டு 6.98 இலட்சம், 2008 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில் 9.87 இலட்சம்; 2009 ஆம்

2010 ஏப்ரல் 23]

ஆண்டைப் பொறுத்தமட்டில் 12.99 இலட்சம். எனவே, வருகிற காலகட்டத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது அரசு நிச்சயமாக பவானிசாகர் அணைக்கட்டு பகுதியில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 5 கோடி ரூபாய் அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கருத்துருக்கள் வாங்கப்பட்டு, சுற்றுலா இடங்களை மேம்படுத்த வேண்டுமென்று அந்த கருத்துருக்கள் எல்லாம் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக மைய அரசினுடைய நிதியைப் பெற்று வருங்காலத்தில் அது சீர்செய்து தரப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

87—

மாணவர் விடுதி

***104831—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலக்கோடு தொகுதி, இருமத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி துவக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதி, இருமத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய விடுதி துவங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், அவையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 23]

ஆண்டைப் பொறுத்தமட்டில் 12.99 இலட்சம். எனவே, வருகிற காலகட்டத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது அரசு நிச்சயமாக பவானிசாகர் அணைக்கட்டு பகுதியில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 5 கோடி ரூபாய் அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கருத்துருக்கள் வாங்கப்பட்டு, சுற்றுலா இடங்களை மேம்படுத்த வேண்டுமென்று அந்த கருத்துருக்கள் எல்லாம் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக மைய அரசினுடைய நிதியைப் பெற்று வருங்காலத்தில் அது சீர்செய்து தரப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

87—

மாணவர் விடுதி

***104831—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலக்கோடு தொகுதி, இருமத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி துவக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதி, இருமத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய விடுதி துவங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், அவையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

88—

மாவட்டக் கல்வி அலுவலகம்

***58098**—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரில் மாவட்டக் கல்வி அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நிர்வாக மேம்பாடு கருதி, அரூர் வருவாய் கோட்டத்தை உள்ளடக்கிய நிர்வாக எல்லைக்குள் இயங்கி வரும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்டு அரூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தைப் புதிதாக ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.*

முற்பகல் 9–50

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கல்வியறிவில் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்ட மாவட்டம் தருமபுரி மாவட்டம். வெறும் 50 சதவிகிதமானவர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றுள்ள மாவட்டம். குறிப்பாக அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் ஆகிய எனது பகுதிகளை எடுத்துக் கொண்டால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் 42.6 சதவிகித மாணவர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்கள். மாவட்டத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே அதிகமாக மக்கள் வாழக்கூடிய பகுதியும் இந்த அரூர்*

2010 ஏப்ரல் 23]

பகுதி தான். 51.84 சதவிகிதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரம் கூறுகிறது.

ஏறக்குறைய 98 பஞ்சாயத்துக்கள், 494 கிராமங்களில் சுமார் 3 இலட்சம் மக்களுக்கு சரிபாதி மேலாக ஒரு வேளைக்குக்கூட உண்ண உணவில்லாமல் ஒன்றரை இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற, அப்பேர்ப்பட்ட பகுதி அரூர் பகுதி. 2004 ஆம் ஆண்டிலேயே தருமபுரி மாவட்டத்தில் 70,000 ரேஷன் கார்டுகள் சரண்டர் செய்யப்பட்டு வேலைவாய்ப்பிற்காக அண்டை மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்த அவல நிலையையும் இந்த மாவட்டம் சந்தித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் வந்த பிறகு மனிதநேயத்தோடு அவர்களுடைய முயற்சியால் 15, 20 ஆண்டு காலமாக கல்விக்கூடங்களே முளைக்காத எனது அரூர் பகுதியில், மரியாதைக்குரிய அன்றைய மாவட்ட ஆட்சியர் திரு. பங்கஜ்குமார் பன்சால் அவர்கள் இருந்த நேரத்தில் 13 பள்ளிகள், துவக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய ஒரு 15 ஆண்டு காலமாக பள்ளிக்கூடமே முளைக்காத கிராமங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை முடியுங்கள். பிரச்சாரம் பண்ணிக் கொண்டிருந்தால் எப்படி?

திரு. ப. டில்லி பாபு: முடித்துவிடுகிறேன். அப்பேர்ப்பட்ட பகுதியில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மாவட்டக் கல்வி அலுவலகம் கொண்டு வரவேண்டுமென்று ஏற்கெனவே நான் வலியுறுத்தியிருந்தேன். ஏறக்குறைய 40 மேல்நிலைப் பள்ளிகள், 30 உயர்நிலைப் பள்ளிகள், 100 நடுநிலைப் பள்ளிகள் ஆக 1,28,000 மாணவர்கள் படிக்கக்கூடிய பகுதி அரூர் பகுதி. 1,450 ஆசிரியர்கள் உள்ள ஒரு பகுதி. தமிழகத்திலேயே 3 மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் இருக்கிறது. அதிலே மிகவும் கீழிருக்கக்கூடிய மாவட்டம் எனது தருமபுரி மாவட்டம். அந்த மாவட்டத்திலே, அரூரிலே, இந்தக் கல்வி மாவட்டத்தை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலோ அல்லது வருகின்ற கல்வியாண்டிலோ தொடங்குவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் டில்லி பாபு அவர்கள் பொதுவாக தருமபுரி மாவட்டத்தினுடைய கல்வி நிலைமைகள் குறித்து இங்கே அவையில் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகள் யாராலும் மறுக்கப்பட முடியாத கருத்துகள். அதிகமாக அந்தப் பகுதியிலே பள்ளிகளைத் தொடங்க வேண்டும்; கல்வியறிவிலும், எழுத்தறிவிலும் பின்தங்கியிருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்துகள் இல்லை. குறிப்பாக, நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அவரே குறிப்பிட்டதைப்போல, அதிகமான பள்ளிகளை அங்கே தொடங்குவதற்கும், இருக்கக்கூடிய பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக்கூடிய முயற்சிகள் வருகின்றபோதுகூட தொடர்ச்சியாக அந்தப் பகுதிக்கு அரசு முன்னுரிமை அளித்து வந்திருக்கிறது. எனவே, அரசைப் பொறுத்தமட்டிலே இப்போது இருக்கக்கூடிய முன்னுரிமை, அந்தப் பகுதியிலே புதியதாகப் பள்ளிக்கூடங்களை உருவாக்க வேண்டும். அதிலே அரசு நிச்சயமாக அந்தப் பகுதிக்கு, குறிப்பாக, அரூர் பகுதிக்கு அவர் குறிப்பிட்டதைபோல, தருமபுரி மாவட்டத்திலே பின்தங்கியிருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளிப்பதற்கு தயாராக இருக்கிறது.

மாவட்டக் கல்வி அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலகத்தினுடைய நிருவாக எல்லைக்குள்ளே வரக்கூடிய உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் அதைப்போல அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள், நலத் துறைப் பள்ளிகள் என்று பல்வேறுபட்ட பள்ளிகளை எடுத்துக்கொண்டால், அரூர் கோட்டத்திலே 67 பள்ளிகள் மாத்திரம் இருப்பதாக எனக்கு புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளுடைய எண்ணிக்கை வரக்கூடிய காலங்களிலே, அரசினுடைய முயற்சியின் காரணமாக, தொடர்ச்சியாக அதிகரிக்கக்கூடிய நிலையில், பல பள்ளிகள் புதிதாக உருவாக்கப்படக்கூடிய நிலையில், அவற்றினுடைய நிருவாக வசதிக்காக பிற்காலத்தில் நிதிநிலைமையையும் கருத்திலே கொண்டு அந்தத் தேவைகள் உருவாகிறபட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு அரசு முன்னுரிமை அளித்து பரிசீலிக்கும்.

2010 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய கனிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் எனது தொகுதியில் இன்னும் 14 கிராமங்களில், கயலாவரம், காட்டுப்பாடி, புறாக்கல்குட்டை, மாங்கனேரி, கோரையாறு, தாதர்வலைசை, கணபதிப்பட்டி, புதூர் பாரதிபுரம், மேல்செங்கம்பாடி போன்ற பகுதிகளில் துவக்கப் பள்ளிகளே முளைக்காமல் இருக்கக்கூடிய நிலைமை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்கூட சொல்லியபோது, நிச்சயமாக நான் அரூர் பகுதிக்கு வந்து நேரிலே பார்க்கின்றேன்; நாடு சுதந்திரமடைந்து 62 ஆண்டுகளாகியும் இன்றைக்கும் பள்ளிக்கூடம் துவக்காமல் இருக்கிற அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவித்தார். வரும் கல்வியாண்டிலாவது இந்த 14 கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா? அதேநேரத்தில் 460 மாணவர்கள் பயிலக்கூடிய எம். தாதம்பட்டி பள்ளியைத் தரம் உயர்த்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாயும், 3 ஏக்கர் நிலமும் அளித்து 3 ஆண்டு காலமாகிறது. அங்கு ஏதோ ஒரு சூழ்நிலையால் பொதுமக்களை ஏவி, அதாவது, எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல, மாணவர்களைப் போராட்டத்தில் தள்ளுகின்ற அவல நிலைமை ஏற்பட்டது 2, 3 நாட்களாக. அங்கு மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிற அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. யாரோ, ஒரு காலத்தில் செய்த தவறுக்கு அந்த மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நான் உண்மையிலே எங்கள் அமைச்சரிடத்தில் மன்றாடி வேண்டிக்கொள்கிறேன். அந்த எம். தாதம்பட்டி பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டும். 460 மாணவர்கள், சுற்றுவட்டார கிராமத்திலே 7, 8 கிராமங்களைத் தாண்டிச் சென்றால்தான் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று படிக்க முடியும். பெண்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி, போயர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள். ஆகவே, இந்தக் கல்வியாண்டில் அறிவிக்க இருக்கக்கூடிய பள்ளிகளில் அந்த எம். தாதம்பட்டி பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்துவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

[2010 ஏப்ரல் 23 முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த ஆண்டு புதிதாகத் துவங்கப்படக்கூடிய தொடக்கப் பள்ளிகளிலே, அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இடங்களிலே அதிக அளவிலே பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும். இதை நானே அவரிடத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவற்றை நேரடியாகப் பார்த்து, அந்தப் பகுதிகளினுடைய நிலைமையை நாங்களே நேரிலே அறிந்துகொள்ளக்கூடிய வகையிலே அங்கே ஓர் ஆய்வினை மேற்கொண்டு, தேவையான துவக்கப் பள்ளிகளை அங்கே துவக்குவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

ஆனால் அதேவேளையிலே, பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டங்கள் நடைபெறுவதென்பது நிச்சயமாக தேவையற்ற ஒன்று. காரணம், அரசு ஒவ்வோராண்டும் 100 பள்ளிகள், 200 பள்ளிகள் என்று திட்டமிட்டு, நிதியொதுக்கம் செய்து தரம் உயர்த்துகிறது. ஆனால், எங்களிடத்திலே வந்திருக்கக்கூடிய கோரிக்கைகள் என்பது, 200, 300, 400, 500–ஐத் தாண்டி இருக்கக்கூடிய கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றிலே மிக முக்கியமாக இருக்கக்கூடிய கோரிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் அரசு செய்ய முடியும். 100 பள்ளிகளுக்குக் கொடுக்க முடியுமென்றால், 100 பள்ளிகளுக்குத்தான் கொடுக்க முடியும். எனவே, கிடைக்காத மீதியிருக்கக்கூடிய 400 பள்ளிகளும் போராட்டத்திலே ஈடுபடுவது என்று ஆரம்பித்தால், இது எதிலே போய் முடியும்? நிச்சயமாக அது தேவையற்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை உணர்ந்து என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே நான் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளையும் புரிந்துகொண்டிருக்கின்றேன். அவருடைய உணர்வைப் புரிந்து, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

2010 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

மரக்கன்று வளர்ப்பு மையம்

***107770—திரு. கி: ஆறுமுகம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் மரக்கன்று வளர்ப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு மரக்கன்று வளர்ப்பது, வேளாண் காடுகளை உருவாக்குவது தொடர்பாக பயிற்சி அளிப்பது மற்றும் மரக்கன்றுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட வன விரிவாக்க மையம் ஒன்று செங்கல்பட்டு தொகுதியிலே, செங்கல்பட்டில் வன விரிவாக்கப் பிரிவின்கீழ் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புவி வெப்பமடைகிறது. அதைக் குறைக்க ஏராளமான மரங்களை நடவேண்டுமென்று உலகம் முழுவதும் இப்போது விழிப்புணர்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும், இந்தப் புவி வெப்பம் அடைவதைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு தமிழகம் முழுக்க இதுபோன்று மரம் வளர்க்கக்கூடிய வனங்களை அமைக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த மரங்களை வளர்ப்பதற்கு ‘பசுமைத் தாயகம்’ என்கிற அமைப்பு தமிழ்நாட்டிலே எங்களுடைய சின்ன அய்யா அவர்கள் தலைமையிலே மிகச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. பல சமயங்களில் நாங்கள்கூட மரக் கன்றுகளைக் கேட்கிறோம். அவற்றைக் கொடுத்தால், நாங்கள்கூட கிராமங்களிலே போய்

நடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கின்றன. மரக் கன்றுகளாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரக்கன்றுகளை அதிகமாகப் பயிரிட வேண்டுமென்பதற்காகத்தான், தமிழகத்திலே வன விரிவாக்க மையங்கள், 32 மாவட்டங்களில், 30 மாவட்டங்களிலே செயல்பட்டு வருகின்றன. அதன்வழியாக மரக்கன்றுகள் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, நெல்லி போன்ற ஒட்டுக் கன்றுகளும் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்குப் பாதி விலையில், மானிய விலையிலே அவை வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 1997–லே துவங்கி, இதுவரை கிட்டத்தட்ட 6 இலட்சத்து 57 ஆயிரத்து 679 எக்டர் நிலப் பரப்பிலே அந்த மரங்களெல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தனியார் காடுகளிலே மரம் வளர்க்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தப் பசுமைப் போர்வையை அதிகமாக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே முதல் முறையாக அதற்கு ஒப்புதல் அளித்து, கடந்த 3 ஆண்டுகாலமாக கிட்டத்தட்ட 52 ஆயிரத்து 500 எக்டரிலே அந்தப் பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நெடுஞ்சாலைத் துறையிலே மாண்புமிகு நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், மரக் கன்றுகளையெல்லாம் பெற்று அவற்றையெல்லாம் சாலையோரங்களிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால், சாலைகளை அகலப்படுத்துகின்ற நேரத்தில் அங்கிருக்கின்ற மரங்களெல்லாம் வெட்டப்பட்டுவிட்ட காரணத்தால் புதிதாக மரம் வளர்க்க வேண்டுமென்று அக்கறையோடு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள், தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற மரம் வளர்ப்புத் திட்டங்களைப்பற்றி இங்கே சொன்னார்கள். இப்போது மரக்கன்றுகளை விவசாயிகளுக்குக் கொடுக்கிறபோது, மானிய விலையிலே கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இலவசமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே காடுகளின் அடர்வு குறைந்துகொண்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது. அதன் அடர்த்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மூலிகைச் செடிகளையும் வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. அந்தத் திட்டம் சென்ற ஆண்டோடு முடிவடைந்துவிட்ட காரணத்தால், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு அதே திட்டம் தொடருவதற்காக நிதியை ஒதுக்கித் தந்து, மீண்டும் 150 கிராமங்களிலே 32,000 எக்டரிலே காடுகள் வளர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே மூலிகைப் பண்ணைகள் 10 இடங்களில் அமைக்கப்பட்டு, அந்த மூலிகைகள் எல்லாம் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே அதிகமான மூலிகைகள் காணப்படுகின்றன. எங்கெல்லாம் மூலிகைகள் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவை பாதுகாக்கப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, உறுப்பினர் அவர்கள் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுமா என்று கேட்டார். பள்ளிகளுக்கு அல்லது அரசு அலுவலகங்களுக்கு மற்ற

[2010 ஏப்ரல் 23

இடங்களுக்கெல்லாம் அவற்றை இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார். ஆண்டுதோறும் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டு காலத்திலே மட்டும் 49,35,000 மரக்கன்றுகள் இந்த வன விரிவாக்க மையத்தின்மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றன. மரக்கன்றுகள் 2007–2008–லே 15 இலட்சமும், 2008–2009–லே 13.6 இலட்சமும், 2009–2010 இலே 20.75 இலட்சமும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

தரம் உயர்த்துதல்

***58666—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டை அரசினர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டை, அரசினர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இடங்களுக்கெல்லாம் அவற்றை இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார். ஆண்டுதோறும் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டு காலத்திலே மட்டும் 49,35,000 மரக்கன்றுகள் இந்த வன விரிவாக்க மையத்தின்மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றன. மரக்கன்றுகள் 2007–2008–லே 15 இலட்சமும், 2008–2009–லே 13.6 இலட்சமும், 2009–2010 இலே 20.75 இலட்சமும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

தரம் உயர்த்துதல்

***58666—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டை அரசினர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டை, அரசினர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

2010 ஏப்ரல் 23]

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டு என்னுடைய கோரிக்கையை ஏற்று, கடலூர் வட்டம், மாவத்தூரில் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டையில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு தேவையான அனைத்து முன்மொழிவுகளும் அரசுக்கு அனுப்பி கிடைக்கப்பெற்றுள்ளன. ஆதி திராவிட விவசாயக் கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் இப்பகுதியில் அதிகம் வசிக்கிறார்கள். இப்பள்ளியில் படிக்கும் ஏழ்மைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களை வெகுதூரம் அனுப்பி உயர்நிலைக் கல்வி கற்க வைக்க பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருக்கும் இவர்களது பெற்றோர்களுக்கு முடிவதில்லை. மேலும், போதிய போக்குவரத்து வசதியும் குக்கிராமங்களில் கிடைப்பதில்லை. எனவே, நந்தன்கோட்டை ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைப்படி மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அங்குள்ள மாணவர்கள் சென்றுவரக்கூடிய தூரம் ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு வருகின்ற ஆண்டில் நிதிநிலைக்கேற்ப இப்பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

[2010 ஏப்ரல் 23

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, ஒரு தனித் தொகுதியாகும். ஆதி திராவிட மக்கள் அதிகம் வசித்து வருகின்றார்கள். எனவே, அந்தப் பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில், நந்தன்கோட்டை பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, என்னுடைய தொகுதியில் பாலராஜபுரம் ஊராட்சி, வீரராக்கியம் பகுதியில் அமைந்துள்ள சிலமநாயக்கன்பட்டி அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, கடந்த 1998 ஆம் வருடம், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் உதவியால் தரம் உயர்த்தப்பட்டது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட பள்ளி, 2002–2003 கல்வியாண்டைத் தவிர, மற்ற அனைத்து கல்வியாண்டுகளிலும், 100 சதவீத தேர்ச்சிபெற்றுள்ளது என்பதைத் தெரிவிக்கின்ற அதேவேளையில், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து முன்மொழிவுகளும் அரசுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தச் சூழ்நிலையில் வரும் கல்வியாண்டில் இந்தப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் கிருஷ்ணராயபுரம் தொகுதியில், மாவத்தூர் என்ற இடத்தில் உள்ள பள்ளி தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போதும் இரண்டு பள்ளிகளைத் தரம் உயர்த்தவேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். நிதிநிலைக்கேற்ப அவை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இல. வேலுசாமி மற்றும் திரு. வை. காவேரி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 23]

82—

சட்டக் கல்லூரி

***75881—திரு. இல. வேலுசாமி:**
திரு. வை. காவேரி:

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

முற்பகல் 10–05

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்றபோது, அந்த நாட்டு மக்களும் சட்டத்தைக் கற்றுணர்ந்து கொண்டால் குற்றங்கள் குறையும். அதேவேளையில் ஆட்சிக்கும் ஒத்துழைப்பாக இருப்பார்கள். அப்படி சட்டத்தைக் கற்றுக்கொள்ள நாட்டில் போதிய சட்டக் கல்லூரிகளைத் தொடங்கி, அதில் மாணவர்களை சட்டம் படிக்க வைத்து, அந்த மாணவர்கள்மூலமாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் என்பது வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களைக் கொண்ட மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாகும். தருமபுரி மாவட்டத்தின் தலைமையிடமான தருமபுரி நகரத்தில் தலைமை குற்றவியல்

நீதிமன்றம் ஒன்றும், மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஒன்றும், விரைவு நீதிமன்றம் ஒன்றும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தாலுகா தலைமையிடத்தில் 4 இடங்களில் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 500 வழக்கறிஞர்கள் பணியாற்றுகிறார்கள். தருமபுரியில் உள்ள நீதிமன்றங்களில், பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நடைபெறுகின்றன. அந்த இரண்டு மாவட்டங்களில் பயிலக்கூடிய மாணவர்களின் நலன் கருதி, தருமபுரியில் ஒரு அரசு சட்டக் கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காவேரி அவர்கள் சட்டத்தைப் பற்றி, Jurisprudence class எடுப்பதைப்போலவே எடுத்திருக்கிறார்கள். நான் அதிலே மாறுபடுகிறவன் இல்லை. ஆகையினால் வழக்குமன்றங்களிலே வழக்கறிஞர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசின் சார்பில் ஏழு சட்டக் கல்லூரிகளை நாம் நடத்துகிறோம். அதுமட்டுமல்லாமல், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலேயும் மாணவர்கள் படிக்கிறார்கள். தனியார் சட்டக் கல்லூரி ஒன்று சேலத்தில் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஆண்டும், கிட்டத்தட்ட பத்தாயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இப்படிப் படித்துப் படித்து வந்த நிறைய வழக்கறிஞர்கள் வழக்குகள் இல்லாமல் இன்னும் வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் மேலும் unemployment-ஐ legal field–இல் உருவாக்குவது மட்டுமல்ல, இப்போது படிக்க வருகின்ற மாணவர்களுக்குப் போதிய இடம் இருக்கிறது. இந்தக் கல்லூரிகளிலே இடம் கிடைக்கவில்லையென்றால்தான், இருக்கின்ற ஏழு, எட்டுக் கல்லூரிகளிலே இடம் கிடைக்கவில்லையென்றால்தான் வேறு கல்லூரி தொடங்க வேண்டிய நிலை ஏற்படும். இருக்கின்ற கல்லூரிகளிலேயே போதிய மாணவர்கள் வரவில்லை. இப்படித்தான் நாங்களும் போராடி, திரு. சி. ஞானசேகரன் அவர்களும் போராடி, வேலூரில் ஒரு சட்டக் கல்லூரி கொண்டு வந்தோம். ஆனால், அந்தக் கல்லூரியிலே இன்னும் போதிய அளவில் மாணவர்கள் சேரவில்லை. அதுவும் புதிதாகத் தொடங்கப்பட்ட கல்லூரி. எனவே, மாணவர்களுடைய

2010 ஏப்ரல் 23]

சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்துதான் ஒரு கல்லூரி ஆரம்பிப்பதா, இல்லையா என்பதை அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஒரு தனியார் சட்டக் கல்லூரி இயங்கி வருகின்றது. அதில் ஒரு மாணவன் சட்டம் பயின்று வரவேண்டுமானால் மூன்று இலட்சம் ரூபாய் செலவாகின்றது. அதுவே ஒரு மாணவன் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரவேண்டுமென்றால், ரூபாய் 50,000 முதல் ரூபாய் 60,000 வரைதான் செலவாகின்றது. ஆகையினால் இந்த இரு மாவட்டங்களில் உள்ள மாணவர்களுடைய வறுமை நிலையைக் கருதி, அவர்கள் தருமபுரியிலேயே அரசுக் கல்லூரியில் சட்டம் பயின்றால், அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். அங்கே நிலம் வேண்டுமானலும் இருக்கிறது, அங்கே இருக்கின்ற அரசு கலைக் கல்லூரியிலே 48 ஏக்கர் நிலம் இருக்கிறது. வேண்டுமானால் அரசாங்கம் அதில் ஒரு பத்து ஏக்கர் சட்டக் கல்லூரிக்காக எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இங்கே நான் பேசும்போது இரண்டு அமைச்சர்களுக்குள் வாதம் ஏற்படுகின்றது. எப்படி அமைச்சர்கள் இதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, சட்டம் படிக்கின்ற மாணவர்களுக்கு வேலையில்லை என்று சொன்னாலும், ஒரு கிராமத்தில் ஒருவன் சட்டம் படித்திருக்கிறான் என்றால், அந்த மாணவன் கட்டாயமாக மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காவேரி, அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் சட்டக் கல்லூரி குறித்த கேள்வியை மாத்திரம் கேளுங்கள். சட்டம் படித்தவர்கள் நிறைய பேர் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நீங்கள் துணை வினாவை மட்டும் கேளுங்கள்.

திரு. வை. காவேரி: மாணவர்கள் சட்டம் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்றாலும், அந்த மாணவர்கள் கிராமத்தில் இருந்தால், மக்கள் மத்தியில் கொஞ்சம் விழிப்புணர்வு இருக்கும். அந்தவகையில் தருமபுரியில் சட்டக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

[2010 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல், இருக்கின்ற சட்டக் கல்லூரிகளிலே மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை உருவானால்தான், மற்றொரு கல்லூரியைத் தொடங்குவதைப் பற்றி அரசு சிந்திக்கும் என்று தெரிவித்தேன். தருமபுரியைப் பொறுத்தவரையில், பக்கத்தில்தான் வேலூர், அங்கே சட்டக் கல்லூரி இருக்கிறது, சேலத்தில் இருக்கிறது, கோயம்புத்தூரில் இருக்கிறது. எல்லாவற்றையும்விட உங்கள் ஊர் மாணவர்கள் பெரும்பகுதியானவர்கள் குளிர்ச்சியாக பெங்களூருக்குத்தான் போகிறார்கள். ஆகையினாலே தருமபுரியிலே தொடங்கினாலும் அவர்கள் பெங்களூருக்குத்தான் போவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10—10

2. தகவல் கோரல்

(அ) மூலவினாவையொட்டி துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் கேள்வி நேரம் என்பது மிக மிக முக்கியமான நேரம். மூலக் கேள்வி கேட்பவர்களுக்கு மட்டும்தான் துணைக் கேள்விக்கு நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதி மறுக்கிறீர்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் காலையிலே எழுந்தவுடனே, என்ன கேள்வி வந்திருக்கிறது என்பதைப் படிப்பதற்கான ஆர்வமே போய்விடும். முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம் என்றிருப்பதில் துணைக் கேள்விகளையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல், இருக்கின்ற சட்டக் கல்லூரிகளிலே மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை உருவானால்தான், மற்றொரு கல்லூரியைத் தொடங்குவதைப் பற்றி அரசு சிந்திக்கும் என்று தெரிவித்தேன். தருமபுரியைப் பொறுத்தவரையில், பக்கத்தில்தான் வேலூர், அங்கே சட்டக் கல்லூரி இருக்கிறது, சேலத்தில் இருக்கிறது, கோயம்புத்தூரில் இருக்கிறது. எல்லாவற்றையும்விட உங்கள் ஊர் மாணவர்கள் பெரும்பகுதியானவர்கள் குளிர்ச்சியாக பெங்களூருக்குத்தான் போகிறார்கள். ஆகையினாலே தருமபுரியிலே தொடங்கினாலும் அவர்கள் பெங்களூருக்குத்தான் போவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10—10

2. தகவல் கோரல்

(அ) மூலவினாவையொட்டி துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் கேள்வி நேரம் என்பது மிக மிக முக்கியமான நேரம். மூலக் கேள்வி கேட்பவர்களுக்கு மட்டும்தான் துணைக் கேள்விக்கு நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதி மறுக்கிறீர்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் காலையிலே எழுந்தவுடனே, என்ன கேள்வி வந்திருக்கிறது என்பதைப் படிப்பதற்கான ஆர்வமே போய்விடும். முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம் என்றிருப்பதில் துணைக் கேள்விகளையும்

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 23] [திரு. டி. சுதர்சனம்]

கேட்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். கேள்வி நேரத்தை 10–30 மணிக்குள் முடித்துக்கொள்ளுங்கள்; அதிலே எந்தப் பிரச்சினையுமில்லை. ஒன்றிரண்டு துணைக் கேள்விகளையாவது கேட்பதற்கு நீங்கள் அனுமதிக்காவிட்டால், இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம் இந்தச் சபையில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள மாட்டார்கள். படிப்பதற்கும் ஆர்வம் போய்விடும். கேள்வி நேரத்தில் சபைக்கு வருவதையே வீண் என்று நினைப்பார்கள். அதனால், நீங்கள் துணைக் கேள்விகளை அனுமதிக்க வேண்டும் என்ற தாழ்மையான வேண்டுகோளை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இன்னோர் உறுப்பினர் கேட்கின்ற கேள்வியிலே நீங்கள் ஏன் ஒட்டிக்கொள்கிறீர்கள்? நீங்களே தனிக் கேள்வி போட வேண்டியதுதானே? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை காரணமாக நானும் சில கருத்துகளை வேண்டுகோளாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கேள்வி நேரம் என்று சொன்னால், அந்த நேரம் நியாயமான கேள்விகளுக்கு முழு நேரம் ஒதுக்குவதற்குப் பேரவைத் தலைவர் கடமைப்பட்டிருக்கிறார். கேள்வி என்று சொல்லி, மானியக் கோரிக்கையிலே பேசுவதைப்போல, இரண்டு நிமிடங்கள், மூன்று நிமிடங்கள் பேசிவிட்டு விடை கேட்பது என்பது, கேள்வி நேரத்திலே நியாயமாக பல ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து அனுமதிக்கப்படுவதில்லை. அண்மைக் காலத்திலேதான் அனுமதிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, ஒரு கேள்வி கேட்டால் துணைக் கேள்வி என்னும் பெயரால் திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு கல்லூரி வருமா என்று கேட்டால், பல பேர், தஞ்சை மாவட்டத்திலே வருமா; சேலம் மாவட்டத்திலே வருமா என்று ஒவ்வோர் உறுப்பினரும் அவரவர்களுடைய தொகுதி அடிப்படையிலே ஒரு கேள்வியைத் தொடர் கேள்வியாகக் கேட்கிறபோது அவையினுடைய நேரம், நியாயமாக அனுமதிக்கப்பட வேண்டாத

கேள்விகளை அனுமதிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, துணைக் கேள்விகளை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப பேரவைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும். மிக முக்கியமான கேள்வி என்றால், அதில் துணைக் கேள்வி என்றால், எதிர்க்கட்சித் தலைவரே எழுந்திருந்து கேட்டு, அந்தக் கேள்வியைப் பதிவு செய்யலாம்.

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்புகொண்டது— நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் இதே அவையில், எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியான நளினி அவர்கள், அவருடைய கைகளிலே செல்ஃபோனை வைத்துக்கொண்டு சிறையிலே கடந்த நான்காண்டுகளாக வெளிநாடுகளில் இருப்பவர்களுடன் பேசினார்கள் என்ற ஒரு கருத்தை இந்த இடத்திலே எழுப்பினேன். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். "விசாரணையில்தான் அவர்கள் நான்காண்டுகளாகப் பேசினார்களா, இல்லையா என்பது தெரிய வரும்" என்று சொன்னார்கள். அவர் செய்தது,* cognizable offence. A case has been registered under section 353, preventing the Government Servants from discharging their duties, *அப்புறம்* 186 and 201—disappearance of the evidence *என்று வழக்குகள் பதிவு செய்து, 42–வது விதி,* Prison Manual *பிரகாரம், அதிலேயும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.* So far she has not been arrested. That is what we learnt. *எனவே நான் அரசிடம் கேட்பதெல்லாம், இப்படிக் குற்றம் செய்த அவர் இதுவரை கைது செய்யப்பட்டாரா? இல்லையா? அவருக்கு இன்னும் முதல் வகுப்பு அளிக்கப்பட்டு வருகிறதா? அவர் தனிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறாரா அல்லது அங்கேயிருக்கக்கூடிய சிறைத் துறை அலுவலர்கள் அவருக்கு உதவிபுரிந்த காரணத்தினாலே, அந்தச் சிறையிலேயே வைத்திருப்பது சரியா அல்லது வேறு சிறைக்கு அவரை மாற்றப் போகிறீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

கேள்விகளை அனுமதிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, துணைக் கேள்விகளை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப பேரவைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும். மிக முக்கியமான கேள்வி என்றால், அதில் துணைக் கேள்வி என்றால், எதிர்க்கட்சித் தலைவரே எழுந்திருந்து கேட்டு, அந்தக் கேள்வியைப் பதிவு செய்யலாம்.

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்புகொண்டது—நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் இதே அவையில், எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியான நளினி அவர்கள், அவருடைய கைகளிலே செல்ஃபோனை வைத்துக்கொண்டு சிறையிலே கடந்த நான்காண்டுகளாக வெளிநாடுகளில் இருப்பவர்களுடன் பேசினார்கள் என்ற ஒரு கருத்தை இந்த இடத்திலே எழுப்பினேன். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். "விசாரணையில்தான் அவர்கள் நான்காண்டுகளாகப் பேசினார்களா, இல்லையா என்பது தெரிய வரும்" என்று சொன்னார்கள். அவர் செய்தது,* cognizable offence. A case has been registered under section 353, preventing the Government Servants from discharging their duties, *அப்புறம்* 186 and 201—disappearance of the evidence *என்று வழக்குகள் பதிவு செய்து, 42–வது விதி,* Prison Manual *பிரகாரம், அதிலேயும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.* So far she has not been arrested. That is what we learnt. *எனவே நான் அரசிடம் கேட்பதெல்லாம், இப்படிக் குற்றம் செய்த அவர் இதுவரை கைது செய்யப்பட்டாரா? இல்லையா? அவருக்கு இன்னும் முதல் வகுப்பு அளிக்கப்பட்டு வருகிறதா? அவர் தனிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறாரா அல்லது அங்கேயிருக்கக்கூடிய சிறைத் துறை அலுவலர்கள் அவருக்கு உதவிபுரிந்த காரணத்தினாலே, அந்தச் சிறையிலேயே வைத்திருப்பது சரியா அல்லது வேறு சிறைக்கு அவரை மாற்றப் போகிறீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

2010 ஏப்ரல் 23]

(இ) காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை, ஜெனரேட்டர் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழகம் மட்டுமன்றி, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு ரேடியோ கதிர்வீச்சு அவசியம் தேவைப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அந்த அரசு மருத்துவமனையில் ஜெனரேட்டர்கூட இல்லாமல் மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் மின் தட்டுப்பாடு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த நோயாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஜெனரேட்டர் வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

(ஈ) கோவை, மெர்கன்டைல் நிதி நிறுவனம் நடத்தி மோசடி— ஏமாந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில்,* Mercantile *என்ற ஒரு நிதி நிறுவனத்தின் பெயரில், திருமதி சசிரேகா என்பவர் ரூ.150 கோடிக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இந்த மோசடி நிதி நிறுவனத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் முதலீடு செய்து ஏமாந்து, பணத்தையும் இழந்து, மன உளைச்சலுக்கும் ஆளாகக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. இதுபோல, பல மோசடி நிறுவனங்கள் நாட்டிலே முளைத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கும், இந்த மோசடி நிறுவனத்திடம் ஏமாந்தவர்களுக்கு உரிய வகையில் இழப்பீட்டுத்*

தொகை கிடைப்பதற்கும் அரசு ஆவன செய்து, அதற்கு நட்வடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், முடிந்துவிட்டது. அடுத்து, வேறு சப்ஜெக்ட் எடுக்கிறேன். கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்கு. . . *(குறுக்கீடு)*

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்பு கொண்டது—நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், வேலூர் பெண்கள் சிறையிலிருக்கும் திருமதி நளினியினுடைய அறையிலிருந்து செல்ஃபோன் எடுத்ததைக் குறிப்பிட்டு, அதற்கு மேற்கொண்டு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

இது குறித்து நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். 20–4–2010 அன்று காலையில் சுமார் 6–00 மணியளவில் routine check–up என்ற முறையில் Jail Superintendent அவர்களும், மற்ற அதிகாரிகளும் அறைதோறும் சோதனையிட்டு வந்தபொழுது, நளினியினுடைய அறைக்குச் சென்று சோதனையிட முயன்றிருக்கிறார்கள். அவர்கள் சோதனையிடுகிறபொழுது, திருமதி நளினி ஒரு துணிப் பையை எடுத்து தொலைவிலே வீசியிருக்கிறார் என்றும், அதைக் கைப்பற்றிப் பார்த்தபொழுது, அதிலே ஒரு செல்ஃபோன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், திருமதி நளினி அவர்கள் அதைப் பிடுங்கி ஒரு bucket–லே போட்டு, அதை toilet–க்குள் ஊற்றிவிட்டதாகவும், Deputy Jailor அவர்கள் பாய்ந்து சென்று toilet–க்குள் கையைவிட்டு அதை எடுத்து 'Q' Branch–க்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும் நான் அன்றைக்குத் தெரிவித்தேன்.

2010 ஏப்ரல் 23] [திரு. துரைமுருகன்]

அதே நேரத்தில், ஒரு செல்ஃபோன் உள்ளே இருந்ததற்கும், அரசு அதிகாரிகள் தங்களுடைய பணிகளைச் செய்கிறபோது, அதைச் செய்யவிடாமல் திருமதி நளினி தடுத்ததற்கும், அந்தப் பெண்கள் சிறையினுடைய Superintendent அவர்கள் பாகாயம் Police Station–லே வழக்கு ஒன்றைப் பதிவு செய்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு Police தன்னுடைய விசாரணையை மேற்கொண்டு வருகிறது. இதற்கிடையில், எடுக்கப்பட்ட அந்த செல்ஃபோனிலிருந்து இதுவரையில் எதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று அரசுக்கு அதிகாரிகள் தெரிவித்த கருத்தை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த செல்ஃபோனை ஆய்வு செய்ததில், அதற்கு நான்கு குறுந்தகவல்கள்—S.M.S. வந்தன என்றும், 12 S.M.S.-கள் சென்றிருக்கின்றன என்றும், 10 Missed Calls record ஆகியிருக்கிறதென்றும், 8 received calls அதிலே பதிவாகியிருக்கின்றன என்றும், 18 dialled numbers அதிலே பதிவாகியிருக்கின்றன என்றும் 'Q' Branch அனுப்பிய அறிக்கையிலே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இவற்றில், எட்டு முறை U.K. நாட்டுக்கு அவர் பேசியிருக்கிறார் என்றும், ஒரு முறை Srilanka–விற்குத் தொடர்பு கொண்டிருக்கிறார் என்றும், இது போக உள்ள எண்களில் 22 முறை தமிழ்நாட்டிலும், ஐந்து முறை சென்னைக்கும் தொடர்பு கொண்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்திருக்கிறது. அவருடைய வழக்கறிஞரோடும் அவர் செல்ஃபோனிலே பேசியிருப்பது இப்பொழுது தெரிய வந்திருக்கிறது.

இந்த செல்ஃபோன் 13–3–2009 அன்றைக்கு activate செய்யப்பட்டிருக்கிறது. அதன் உரிமையாளர் திரு. ரவி என்றும், அவரது முகவரி, 4/264 கனகசமுத்திரம் வில்லேஜ், காட்பாடி தாலுகா என்றும் அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த செல்ஃபோனுடைய எண் '9629988352' என்றும் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

வெளிநாட்டுக்குப் போன நம்பர்கள், யார், யாருக்குப் போயிருக்கின்றன என்பதையெல்லாம் 'Q' Branch அதிகாரிகள் துருவித் துருவி விசாரணை நடத்துவார்கள். பதிவு செய்யப்பட்ட வழக்கின்மீது, காவல் துறையால் I.P.C. section–ல் அவர்கள்மீது charge செய்து, நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கிடையில் அவருடைய வழக்கறிஞர் அவர்கள் நளினியின் அறையில்

[திரு. துரைமுருகன்] [2010 ஏப்ரல் 23

செல்ஃபோன் வைத்து எடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறாரே தவிர, அதன்மீது எந்தவிதமான complaint–ம் தரவில்லை. எனவே, இதுவரை வந்த தகவலை நான் இந்த அவைக்கு அளித்திருக்கிறேன்.

முற்பகல் 10–20

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலத்தைப் பாதுகாப்பதில் C.M.D.A. விதித்த நிபந்தனைகளை மீறி, தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. அ. தமிழரசு, டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. ஞா. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன் ஆகியோர் விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 3.03 ஏக்கர் நிலத்தில் 1.77 ஏக்கர் நிலம் திருக்கோயிலுக்குச் சொந்தமானதாகவும், அதில் 1.26 ஏக்கர் நிலம் ஏற்கெனவே மத்திய அரசினுடைய பொதுப் பணித் துறைக்கு விற்கப்பட்டதாகவும், கடந்த ஆண்டு இதே மாமன்றத்தில் எழுப்பிய ஒரு கவன ஈர்ப்புத்*

(இ) காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை, ஜெனரேட்டர் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழகம் மட்டுமன்றி, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு ரேடியோ கதிர்வீச்சு அவசியம் தேவைப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அந்த அரசு மருத்துவமனையில் ஜெனரேட்டர்கூட இல்லாமல் மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் மின் தட்டுப்பாடு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த நோயாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஜெனரேட்டர் வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

(ஈ) கோவை, மெர்கன்டைல் நிதி நிறுவனம் நடத்தி மோசடி— ஏமாந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில்,* Mercantile *என்ற ஒரு நிதி நிறுவனத்தின் பெயரில், திருமதி சசிரேகா என்பவர் ரூ.150 கோடிக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இந்த மோசடி நிதி நிறுவனத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் முதலீடு செய்து ஏமாந்து, பணத்தையும் இழந்து, மன உளைச்சலுக்கும் ஆளாகக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. இதுபோல, பல மோசடி நிறுவனங்கள் நாட்டிலே முளைத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கும், இந்த மோசடி நிறுவனத்திடம் ஏமாந்தவர்களுக்கு உரிய வகையில் இழப்பீட்டுத்*

(இ) காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை, ஜெனரேட்டர் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழகம் மட்டுமன்றி, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற காஞ்சிபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு ரேடியோ கதிர்வீச்சு அவசியம் தேவைப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அந்த அரசு மருத்துவமனையில் ஜெனரேட்டர்கூட இல்லாமல் மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் மின் தட்டுப்பாடு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த நோயாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஜெனரேட்டர் வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

(ஈ) கோவை, மெர்கன்டைல் நிதி நிறுவனம் நடத்தி மோசடி— ஏமாந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில், Mercantile என்ற ஒரு நிதி நிறுவனத்தின் பெயரில், திருமதி சசிரேகா என்பவர் ரூ.150 கோடிக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இந்த மோசடி நிதி நிறுவனத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் முதலீடு செய்து ஏமாந்து, பணத்தையும் இழந்து, மன உளைச்சலுக்கும் ஆளாகக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. இதுபோல, பல மோசடி நிறுவனங்கள் நாட்டிலே முளைத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கும், இந்த மோசடி நிறுவனத்திடம் ஏமாந்தவர்களுக்கு உரிய வகையில் இழப்பீட்டுத்

தொகை கிடைப்பதற்கும் அரசு ஆவன செய்து, அதற்கு நட்வடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், முடிந்துவிட்டது. அடுத்து, வேறு சப்ஜெக்ட் எடுக்கிறேன். கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்கு. . . *(குறுக்கீடு)*

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி செல்ஃபோனில் பலருடன் தொடர்பு கொண்டது—நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், வேலூர் பெண்கள் சிறையிலிருக்கும் திருமதி நளினியினுடைய அறையிலிருந்து செல்ஃபோன் எடுத்ததைக் குறிப்பிட்டு, அதற்கு மேற்கொண்டு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

இது குறித்து நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். 20–4–2010 அன்று காலையில் சுமார் 6–00 மணியளவில் routine check–up என்ற முறையில் Jail Superintendent அவர்களும், மற்ற அதிகாரிகளும் அறைதோறும் சோதனையிட்டு வந்தபொழுது, நளினியினுடைய அறைக்குச் சென்று சோதனையிட முயன்றிருக்கிறார்கள். அவர்கள் சோதனையிடுகிறபொழுது, திருமதி நளினி ஒரு துணிப் பையை எடுத்து தொலைவிலே வீசியிருக்கிறார் என்றும், அதைக் கைப்பற்றிப் பார்த்தபொழுது, அதிலே ஒரு செல்ஃபோன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், திருமதி நளினி அவர்கள் அதைப் பிடுங்கி ஒரு bucket–லே போட்டு, அதை toilet–க்குள் ஊற்றிவிட்டதாகவும், Deputy Jailor அவர்கள் பாய்ந்து சென்று toilet–க்குள் கையைவிட்டு அதை எடுத்து ‘Q’ Branch–க்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும் நான் அன்றைக்குத் தெரிவித்தேன்.

செல்ஃபோன் வைத்து எடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறாரே தவிர, அதன்மீது எந்தவிதமான complaint–ம் தரவில்லை. எனவே, இதுவரை வந்த தகவலை நான் இந்த அவைக்கு அளித்திருக்கிறேன்.

முற்பகல் 10–20

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலத்தைப் பாதுகாப்பதில் C.M.D.A. விதித்த நிபந்தனைகளை மீறி, தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. அ. தமிழரசு, டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. ஞா. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன் ஆகியோர் விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 3.03 ஏக்கர் நிலத்தில் 1.77 ஏக்கர் நிலம் திருக்கோயிலுக்குச் சொந்தமானதாகவும், அதில் 1.26 ஏக்கர் நிலம் ஏற்கெனவே மத்திய அரசினுடைய பொதுப் பணித் துறைக்கு விற்கப்பட்டதாகவும், கடந்த ஆண்டு இதே மாமன்றத்தில் எழுப்பிய ஒரு கவன ஈர்ப்புத்*

2010 ஏப்ரல் 23] [திரு. பி.கே. சேகர்பாபு]

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, நம்பம்பட்டியிலிருந்து புரசம்பட்டி வழியாக நெல்லுமேட்டுபட்டி ஊராட்சி ஒன்றிய சாலையில் குறுக்கிடும் சூரளி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12269, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12652, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12684, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டத்தில் கிராமப்புறப் பஞ்சாயத்துகளில் துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

@ 191 முதல் 602 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I மற்றும் IIஆக அச்சிடப்பட்டுள்ளன.

முற்பகல் 10–55

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. *நான்* demand–க்குப் *போயாகிவிட்டது. (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். (குறுக்கீடுகள்) ஒருவேளை தாங்கள் கூறுவது போல அப்படிப்பட்ட சொல் இருந்தால் தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று நான் அவைத் தலைவரை உங்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* ** *என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பின்மீது எந்தக் கருத்தும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு திருத்தம்.* ** *வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.பி. அன்பழகன். (குறுக்கீடுகள்) அடிக்கடி எழுந்திருந்து நிற்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு சப்ஜெக்டிற்குப் போயாகிவிட்டது. நீங்கள்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2010 ஏப்ரல் 23] *[பேரவைத் தலைவர்]*

நீக்கச் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. இன்னும் என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்)

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகும் நீங்கள் எழுந்திருந்து நின்றால் அது முறை இல்லை, உட்காருங்கள்.*

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.அன்பழகன். ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் வேகத்தையும், பேரறிஞர் அண்ணாவின் அறிவையும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தாய் உள்ளத்தையும் ஒருங்கே பெற்று, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்கி, எனது உரையைத் துவங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற

வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் கோரிக்கை எண் 42—பக்கம் 128—இல் நிர்மல் கிராம புரஸ்கார் விருதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் என்ற விருதை மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, தமிழ்நாட்டில் 2004–2005 ஆம் ஆண்டில் 12 ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் அவ்விருதினைப் பெற்று இந்தியாவிலேயே முதலிடத்தை வகித்தது. 2005–2006 ஆம் ஆண்டில் 119 ஊராட்சிகளும், 2006–2007 ஆம் ஆண்டில் 296 ஊராட்சிகளும், 2007–2008 ஆம் ஆண்டில் 1,474 ஊராட்சிகளும், 5 ஒன்றியங்களும் இடம்பெற்றன. 2008–2009 ஆம் ஆண்டில் 196 ஊராட்சிகள் இடம்பெற்றன. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் முழுமையான சுகாதார இயக்கத் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த ஊக்கம் அளிக்கும் நோக்கத்தோடு "தூய்மையான கிராம இயக்க விருது" என்ற பெயரிலே மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசு நிர்மல் கிராம புரஸ்கார் அறிவிப்பதற்கு முன்பாக ஒரு வருடத்திற்கு 15 ஊராட்சிகளைத் தேர்வு செய்து, ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையிலேதான் மத்திய அரசு, இந்த நிர்மல் கிராம புரஸ்கார் விருது அறிவித்தவுடன் முதன்முதலிலே 38 ஊராட்சிகளிலும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலும் மத்திய அரசு மூலமாகப் பரிசுகள் வழங்குகிறபோது தமிழ்நாட்டில் 12 ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் பரிசு பெற்று இந்திய அளவிலே 35 சதவிகிதப் பரிசாக ரூபாய் 48 இலட்சத்தைப் பெற்றது. அன்று மற்ற மாநிலங்கள் எல்லாம் சேர்த்து 91 இலட்சம் ரூபாய் பெற்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தமிழகத்திலே முந்தைய காலத்தில் 12,618 கிராம ஊராட்சிகள்; இன்று 12,620 கிராம ஊராட்சிகளாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, 2008–2009

ஆம் ஆண்டில் 196 ஊராட்சிகள் மட்டும் விருது பெற்றிருக்கின்றன. ஆக, மீதம் இருக்கின்ற ஊராட்சிகள் சுகாதார வசதியை முழுமையாகப் பெறவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. 'இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் வாழ்கின்றது' என்று அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டார்கள். ஆனால், மேலே குறிப்பிட்ட புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபோது இந்த அரசுக்கும், துணை முதல்வருக்கும் கிராமப் பகுதி மக்கள்மீது அக்கறை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், எங்கள் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் முழு சுகாதாரத் திட்டம் ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே இருந்தது. 2000–2001–ல் 15 சதவிகிதமாக இருந்த முழு சுகாதாரமானது,2001–2002–ல் 19 சதவிகிதம், 2002–2003–ல் 27 சதவிகிதம், 2003–2004–ல் 40 சதவிகிதம், 2004–2005–ல் 54 சதவிகிதம் என்று உயர்ந்து கொண்டே இருந்தது. அந்தநேரத்தில் மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் ரகுவந்த் பிரசாந்த் சிங் அவர்கள் 7–5–2005 அன்று பார்வையிட்டு, ஊரக முழு சுகாதார இயக்கம் தமிழ்நாட்டில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டதாகப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்புத் திட்டம். இந்தத் திட்டம் மத்திய அரசின்மூலமாக உருவாக்கப்பட்ட திட்டம். 3–12–2005 அன்று திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. நகர்ப்புற வளர்ச்சிக்காக இதிலிருந்து மத்திய அரசின் 90 சதவிகித மானியமும், மாநில அரசின் 10 சதவிகிதமும் அங்கே செலவழிக்கப்பட்டு, பல்வேறு வகையிலே வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, இந்த அரசானது கிராமப் பகுதி மக்கள்மீது தனி அக்கறை செலுத்தி இங்கே குறிப்பிட்டுள்ளதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மானியக் கோரிக்கை எண் 34–ல், பக்கம் 61, பத்தி 2.13—'தொற்றுநோய் மருத்துவமனை நவீனப்படுத்தப்படும்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த இடத்திலிருந்து பழைய கட்டடத்தை இடித்ததில் டெண்டர் கோரப்படாமல் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிபோய் உள்ளன. மேலும் பழமையான கட்டடங்கள் என்றால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிடம் அனுமதி பெற்று அவற்றை இடிக்க வேண்டும்; அவர்களிடமும் அனுமதி பெறவில்லை. இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்கள்

ஓர் ஆர்ப்பாட்டம் அறிவித்தவுடன் அந்தப் பகுதியின் செயற் பொறியாளரை தற்காலிக பணி நீக்கம் செய்தீர்கள். ஆகவே, இதில் முறைகேடு நடந்திருக்கிறது என்பது நிரூபணமாகிறது. இதுசம்பந்தமாக மேல் நடவடிக்கை எதுவுமில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, அதாவது 2009–2010 ஆம் ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே இருக்கும் 153 மின்சாரக் கம்பங்களில் தெரு விளக்குகள் அமைக்க வேண்டுமென்று முன்மொழிவு அனுப்பப்பட்டது. மாவட்ட நிர்வாகமானது அதைப் பரிசீலனை செய்து, அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று தெரிவித்தது. காரணம் கேட்டமைக்கு, புதிதாக கம்பம் அமைத்து அதில் நீங்கள் தெரு விளக்கு அமைக்கலாம், ஒரு கம்பத்திற்கு ரூ.9,500 நிதி இருக்கிறது என்று சொல்லி, இருக்கின்ற கம்பத்தில் தெரு விளக்குகள் அமைப்பதை அவர்கள் அங்கே அனுமதிக்கவில்லை. ரூ.2,000 செலுத்தினால் தெரு விளக்கு அமைக்கலாம் என்று கடந்த 4 ஆண்டு காலமாக பல்வேறு கிராமப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு தெரு விளக்கு அமைக்கப்பட்டது. அதை ஏன் இந்த ஆண்டு இந்த அரசு மாற்றி அமைத்திருக்கிறது என்பதைத் தெரிந்து, அதைத் தவிர்த்து, மீண்டும் கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு, ஏற்கெனவே இருக்கிற மின்சாரக் கம்பங்களில் புதிதாக தெரு விளக்குகள் அமைப்பதற்கான அனுமதியைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற மின் தடையின் காரணமாக கிராமப் பகுதிகளில் இருக்கின்ற மின் மோட்டார்கள் அவ்வப்போது பழுதாகின்றன. அவற்றை நிவர்த்தி செய்கின்ற வகையிலே ஊராட்சி மன்றத் தலைவருடைய பணிகள் இருப்பதில்லை. அதேநேரத்தில், குடிநீர்ப் பற்றாக்குறையும் இருக்கிறது. இந்த வகையில் கிராமத்தில் இருக்கிற மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மின்சாரம் சரியாக இல்லாத நேரத்தில், குறிப்பிட்ட அளவிற்கு ஒரு மின் விசை பம்ப்பினை சரி செய்வதற்கு ரூ.7,500 மட்டும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிற காலகட்டத்தில், மேலும் மின்சாரப் பிரச்சினையால் பழுதானால் அவர்கள் அதை சரி செய்வதில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு நீராதாரம் கிடைப்பது இல்லை என்பதை மனதில்கொண்டு, தனிக்கவனம் செலுத்தி, போர்க்கால

அடிப்படையிலே அந்தப் பகுதியில் இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளையில் நிலத்தடி நீரானது அதிக வறட்சி காரணமாக 100 அடிக்குக் கீழே சென்றுவிட்ட காரணத்தினால், அந்தக் கிராமப் பகுதியில் இருக்கிற கை பம்ப்பில் தண்ணீர் கிடைப்பது இல்லை. 150 அடி, 200 அடி, 300 அடிக்குக் கீழே தண்ணீர் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக இதுபோன்ற வறட்சி ஏற்பட்ட காலகட்டத்திலே, 39,796 இடங்களிலே சிறு மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. அதைக் கவனத்தில்கொண்டு சிறப்புக் கவனம் செலுத்தி கை பம்ப்பின்மூலமாக தண்ணீர் வராத பகுதிகளிலே இதுபோன்ற சிறு மின்விசைத் திட்டத்தை அமைத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே இந்த அரசு செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III, மாண்புமிகு அம்மா அவர்கள் 19–10–2005 அன்று தொடங்கி வைத்தார்கள். உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 1,925 கோடி ரூபாய், கால அளவு 5 வருடம். இந்தத் தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி மற்றும் பேருந்து நிறுத்தம் மேம்பாடு, சாலை மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைப்பது போன்ற பணிகளுக்கு செலவழிக்கப்பட வேண்டிய தொகை. இன்றைய நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு பணிகள் இடம் பெற்றிருக்கின்றன. முக்கியத் திட்டமான பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி முடிவு பெறாமல் இருக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–ன் துணைத் திட்டங்களுக்காக கொள்முதல் மற்றும் செயலாக்கத் திட்டம் ஆகியவை திருத்தப்பட்டதன் அடிப்படையிலே இத்திட்டம் முடிவடையும் காலம் 2012 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 34–க்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 322, 323–இல் பார்க்கின்றபொழுது பாதாளச் சாக்கடைத் திட்டம்–1, பேருந்து நிலையங்கள்–3, குடிநீர் வழங்கல் திட்டங்கள்–13, சாலைகள்–17, திடக் கழிவு மேலாண்மை–32, ஆக 66 பணிகள் முடிக்கப்பட்டிருக்கிறன. இதில் பாதாளச் சாக்கடைத் திட்டம் மொத்தம் 24 மாவட்டத் தலைநகரங்களில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், அந்த தினத்திலே கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தில் 16 திட்டங்களுக்கு அனைத்துச் சிப்பங்களுக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், 7 திட்டங்களுக்குப் பகுதியான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரேயொரு பாதாளச் சாக்கடைத் திட்டம் மட்டும் நிறைவடைந்துள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வளவு காலதாமதம் ஏன்? நீட்டிக்கப்பட்டுள்ள கால அளவு துணைத் திட்டங்களுக்கு மட்டுமா அல்லது இதற்கும் பொருந்துமா? இதற்குப் பொருந்தாவிட்டால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட 5 ஆண்டு காலம் நிறைவு பெறுகிறது என்ற வகையிலே இந்த அரசுக்கு நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 34–க்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 328, 329, 330, 331 ஆகிய 4 பக்கங்களை அலங்கரிக்க வித்திட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை மாநகரில் பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய பெரிய திறந்தவெளிப் பூங்கா ஒன்றை அமைத்திட அரசு முடிவு எடுத்தது. இதன் அடிப்படையிலே பல்வேறு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, இறுதியாக “அடையார் கிரீக்” தேர்வு செய்யப்பட்டது. எனவே, மீன்வளத் துறைக்குச் சொந்தமான இந்த நிலத்தினுள் சென்னை மாநகராட்சி நுழைந்து பூங்கா அமைக்க அரசாணை வழங்கியது. ஆணை எண் 632, நாள் 22–12–2003. இவ்விடத்தின் அளவு 58 ஏக்கர். முதற்கட்டமாக இவ்விடத்திலிருந்த செடி, கொடிகள், முட்புதர்கள் அகற்றப்பட்டன. மேலும் 330 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடமாக குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டன. இவ்விடத்தைப் பாதுகாக்கும் பொருட்டு 3.55 கிலோ மீட்டர் நீளத்தில் 2.40 மீட்டர் உயரத்தில்

சுற்றுச் சுவர் கட்டத் தீர்மானிக்கப்பட்டு, நிருவாக ஒப்புகை அரசாணை எண் 278, நாள் 8–7–2004–இல் பெறப்பட்டது. சுற்றுச் சுவர் ரூபாய் 115 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இப்படி, எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுத்துகின்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களே என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் 42–க்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 198 முதல் 222 வரை. நவம்பர் 2005–லே மாண்புமிகு அம்மா அவர்களால் 6 ஆண்டு காலத் திட்டமாக உலக வங்கி உதவி பெறும் புதுவாழ்வுத் திட்டம் ரூ.717 கோடியில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அந்தத் திட்டம் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பில் கிட்டத்தட்ட 25 பக்கங்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம், ஏழையெளியோர், ஒதுக்கப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர் ஆற்றல் பெறுதல் மற்றும் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை ஏற்றுதலாகும். 31–3–2010 வரை செலவு செய்தது ரூபாய் 388 கோடியே 44 இலட்சம். 5 ஆண்டு முடிவுற்றது. மீதம் ஓராண்டு உள்ளது. மேலும், இந்தத் திட்டத்திற்கு உலக வங்கிக்கு 950 கோடி பின்தங்கியுள்ள பிற வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்த முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அப்படியென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்பதை நீங்கள் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கூறிக்கொள்கின்றேன். மேலும், தொடர்ந்து 5 ஆண்டு காலமாக இந்தத் திட்டத்தில் பணம் செலவு செய்யவில்லை, திட்டத்தை ஆரம்பிக்கவில்லை என்று கொள்கை விளக்கக் குறிப்பில் எழுதுகின்றீர்கள். இது இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுடைய வேலையா? பக்கம் 247–இல் உள்ளது, அல்லது அமைச்சர் அவர்களுடைய வேலையா? திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தேதி மற்றும் தேர்தல் அறிவிப்பு, புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றபொழுது செயல்படுத்த கால அவகாசம், இவையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இனி வருங்காலத்தில் இதைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே அறிவுறுத்திக் கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

கிராம ஊராட்சிகளில் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன என்றும், இதற்காக ஊராட்சிகளைத் தணிக்கை செய்யும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய உத்தரவு ஒன்றினை அரசு சமீபத்தில் பிறப்பித்துள்ளதாகவும், இதனை எதிர்த்து தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலக சங்கத்தினர் ஏப்ரல் 21–ல் ஒட்டுமொத்தமாக சிறு விடுப்புப் போராட்டம் நடத்தியிருப்பதாகவும் தினசரி நாளிதழில் செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது. அந்த நாளிதழ் 'தினமலர்', தேதி 21–4–2010. கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் அவர்களுக்கான நலத் திட்டங்களில் இந்த அரசு ஊழல் புரிந்துள்ளதை இச்செய்தி பறைசாற்றுகிறது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தும் நிலை குறித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான முதன்மைக் கணக்கு ஆய்வாளர் அவர்கள் தெரிவித்திருப்பது என்ன? தமிழகத்தில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் கடலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் குறித்து ஆய்வு செய்த மாநில கணக்காய்வுத் தலைவர் இத்திட்டம் சரிவர செயல்படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். 2006–2007 ஆம் ஆண்டில் வேலை அளிக்கப்பட்ட 6 இலட்சத்து 83 ஆயிரம் குடும்பங்களில் 1,824 குடும்பங்கள் மட்டுமே, அதாவது 0.27 சதவிகிதம் குடும்பங்களுக்கு மட்டுமே 100 நாட்கள் வேலை வழங்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள 99.73 சதவிகிதம் குடும்பங்களுக்கு 27 நாட்கள் மட்டுமே வேலைவாய்ப்பு தரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான 100 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதம் மீறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கத்தை அடைவதில் இந்த அரசின் இயலாமையைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த அரசின் கையாலாகாத செயலை இது பறைசாற்றுகிறது.

பெரிய திட்டங்களை இத்தனை கோடி செலவில் நிறைவேற்றுகிறோம் என்று வீணான அறிவிப்பு செய்து மக்களை ஏமாற்றுவதிலே இந்த அரசு குறியாக இருக்கிறது. இதுகுறித்து ஒரு முக்கிய விஷயத்தை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய

விரும்புகிறேன். 2007–2008 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கு மாநில அரசு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ.62,626 கோடி. ஆனால், செலவு செய்த தொகை ரூ.56,707 கோடி மட்டுமே. ஏறக்குறைய 5,919 கோடி ரூபாய் அரசிடம் பல்வேறு துறைகளால் சரண்டர் செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் ஏறக்குறைய 10 சதவிகிதத் தொகை அரசுக்கு சரண்டர் செய்யப்பட்டுள்ளது. தேவைகளை இந்த அரசு சரியாக மதிப்பீடு செய்யாததைக் குறிக்கிறது. இதை நான் கூறவில்லை. தமிழ்நாடு அரசின் கணக்குகள் குறித்து மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை அவர்கள் கூறியிருக்கின்றார்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 6 மாவட்டங்களில் ரூ.1, ரூ.2 கோடி அல்ல, ஏறக்குறைய ரூ.120 கோடியே 98 இலட்சம் அளவுக்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தகுதியற்ற இனங்களைப் பொருத்தி இணைக்கப்பட்டுள்ளதாக, காட்டப்பட்டுள்ளதாக இந்தியக் கணக்குத் துறைத் தலைவர் தனது அறிக்கையில், மார்ச் 31, 2008–ல் தெரிவித்துள்ளார். மேலும், 2006–2007 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் 754 கணக்குகள் உள்ளாட்சி தணிக்கையாக அளிக்கப்படவில்லை என்றும், தெரிவித்துள்ளார்.

சென்னிமலை கேசி. பாளையம், பெருந்துறை பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த எங்களது அம்மா அவர்களது ஆட்சியில் பிப்ரவரி 2006–ல் உருவாக்கப்பட்டது. ஆனால், மார்ச் 2006 முதல் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் ஒப்பந்தப்புள்ளிக்குக் கால நீட்டிப்பு கோரப்பட்டது. இறுதியாக பல்வேறு கால நீட்டிப்புக்குப் பின்னர் மே 2007–ல் இத்திட்டம் இறுதி செய்யப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதை அதன் கெடு தேதி முடிவுறும் முன்னரே ஒப்பந்ததாரருக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது தெரிவிக்கத் தவறியதால் ரூ.3.32 கோடி நஷ்டத்தினை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. மக்களது வரிப் பணம் இந்த அளவிற்கு வீணடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாணை நிலை எண் 38, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5–3–2008–ன்படி சுய நிதிக் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் கட்டடங்களுக்கு வீட்டு வரி நிர்ணயித்து கிராம

ஊராட்சிகள் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு உதவி பெறாத சுய நிதி பாடப் பிரிவுகளை நடத்தும் அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்களிடமிருந்து இந்த வரி வசூல் செய்யப்படுகிறது. ஆனால், நகராட்சிப் பகுதிகளில் சுய நிதியால் நடத்தப்படும் அரசு உதவி வழங்கப்படாத வகுப்புகளுக்காக நடத்தப்படும் தனியார் பள்ளிகள் இந்த சொத்து வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை. இந்தப் பள்ளிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தப் பாரபட்சம்? ஒரு கண்ணுக்கு வெண்ணை, இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பா என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி–கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமானது நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்தப் பகுதி மக்களுடைய ஏக்கத்திற்காக 1986–ல் தருமபுரியில் ஒகேனக்கல் கோட்டம் அமைக்கப்பட்டு, 5 ஒன்றியங்கள் மட்டும் செயல்படுத்த ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுப் பணிகள் முடிந்து மேற்பார்வைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர், வேலூர் அவர்களின் பரிந்துரையின் பேரிலே சுமார் 120 கோடி ரூபாய்க்கு இத்திட்டத்தினை தொழில்நுட்பக் குழுமத்தின் அனுமதி பெற்று வாரிய ஒப்புதலுக்காக 1988–ல் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. அதற்கு அடுத்தகட்டமாக 1998–லே மாண்புமிகு இன்றைய தமிழக முதல்வர், அன்றைக்கு முதல்வராக இருந்தபோது தருமபுரி மாவட்ட வருகையின்போது காரிமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை உலக வங்கி நிதியுதவி கிடைக்காதபட்சத்தில் அரசே இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தினை பகுதிப் பகுதியாக செயல்படுத்துமென்று அறிவித்தார். அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தருமபுரி–கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டத்தில் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் 18–லும் 6,755 குடியிருப்புகளுக்குத் திட்ட மதிப்பீடு ரூபாய் 1,005 கோடியில் போடப்பட்டு, மத்திய அரசுக்கு ஜப்பான் நிதி உதவி பெறுவதற்காக 18–8–2005–லே பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கடுத்த கட்டமாக, இன்றைய முதல்வர் 26–2–2008–லே ரூபாய் 1,334 கோடியில் தருமபுரியிலே வந்து இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா செய்தார்கள். இன்றையதினத்திலே பார்க்கின்றபோது, ரூபாய் 1,929 கோடியிலே திட்ட மதிப்பீடானது மாறியிருக்கின்றது.

இதையெல்லாம் உற்று நோக்குகின்றபோதும், பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கின்றபோதும், 'ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இதோ ஆரம்பித்துவிட்டோம், அடிக்கல் நாட்டிவிட்டோம், இத்திட்டம் ஓரிரு ஆண்டுகளில் முடிந்துவிடும்' என்று இந்த அரசு அறிவிக்கிறது. ஆனால், உண்மை நிலவரம் என்ன? கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் திரு. பசவராஜ் பொம்மை அவர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றுவதை எதிர்த்து சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறுகின்றார். 'தினமணி' சென்னைப் பதிப்பில் 20–4–2010 அன்று "காவிரி ஆற்றிலிருந்து பெண்ணாறுக்கு மாற்றி திட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து இதுவரை இரு மாநில அரசுகளும் பேசவில்லை. மத்திய அரசு இந்த விஷயத்தில் தலையிட வேண்டுமென்று அவர் தெரிவித்திருக்கின்றார். அரசியல் ரீதியாகத் தீர்வு காண முடியாத இந்த விவகாரத்தை சட்ட ரீதியாக கர்நாடக அரசு எதிர்கொள்ளும் என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, நடப்பது என்ன என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்." அதே வேளையில். . . (குறுக்கீடு)

(முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் இங்கே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் திரு. பசவராஜ் பொம்மை அவர்கள் தெரிவித்த சில கருத்துகள், சில பத்திரிகைகளில் வந்த அந்தச் செய்திகளைப் பற்றி அவர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். நான் இந்தப் பிரச்சினைகளுக்குள் அதிகம் செல்ல விரும்பவில்லை. பதிலுரையிலே இதற்கான விளக்கங்கள் விரிவாக எடுத்துச் சொல்லப்படவிருக்கின்றன. இருந்தாலும், இன்று காலையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசி, அது மாலையிலே செய்தியாக வெளியிலே வந்துவிடும் என்கிற காரணத்தால் நான் இப்போதே ஒரு சிறு விளக்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தவித ஆதாரமும் இல்லாத வகையில் இந்தச் செய்திகளை அவர் எடுத்துச் சொல்லி, அது பத்திரிகையிலே

வெளிவந்திருக்கிறது. கர்நாடக அமைச்சர் தெரிவித்திருக்கக்கூடிய அடிப்படையிலே இந்தத் திட்டத்திற்காக 1.7 டி.எம்.சி. தண்ணீரோ அல்லது 2.5 டி.எம்.சி. தண்ணீரோ எடுக்கத் திட்டமிடப்படவில்லை. 1.4 டி.எம்.சி. குடிநீர் மட்டுமே பயன்படுத்தக்கூடிய வகையிலே மத்திய அரசிடமிருந்து ஒப்புதலை முறையோடு பெற்றதற்குப் பிறகுதான் அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், இந்தத் திட்டத்தினுடைய தலைமையிடத்துப் பணிகள் அவருடைய எல்லையிலே தொடங்கப்பட்டிருப்பதாக அவர் சொல்லி, அதுவும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுவும் உண்மைக்கு மாறான செய்தி. நான் உண்மையைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், இந்தத் திட்டத்தினுடைய தலைமையிடத்துப் பணிகளைப் பொறுத்தவரையிலே தமிழக எல்லையிலேதான் துவக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கர்நாடக அரசு தெரிவித்துள்ளவாறு சர்ச்சைக்குரிய கர்நாடக எல்லையில் நிச்சயமாகத் துவக்கப்படவில்லை. எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முறையாக மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்ற பிறகுதான் இது நடந்துகொண்டிருக்கின்றது. ஆக, இன்று நிறைவேற்றப்படும், நாளை நிறைவேற்றப்படும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய நிலையில் இல்லை என்பதை அவர் இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். நிச்சயமாக நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்த அளவிற்குக் கால நிர்ணயம் வழங்கப்பட்டிருக்கிறதோ, அதற்கு முன்பே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற பணியிலே இந்த அரசு நிச்சயமாக ஈடுபடப் போகிறது என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கூறியதன் அடிப்படையிலே கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டமானது, 16–4–2008–ல் மானியக் கோரிக்கை விவாதத்திற்கான பதிலுரையில், ‘25–2–2007 அன்று மீஞ்சூரில் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு

விழா, ஆகஸ்ட் 2008–ல் தினசரி 15 மில்லியன் லிட்டர் குடிநீரும், 2009 ஆம் ஆண்டின் துவக்கத்திலே தினசரி 100 மில்லியன் லிட்டர் குடிநீரும் சென்னைக்கு வரவிருக்கிறது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்' என்று அவர் மானியக் கோரிக்கையின் பதிலுரையிலே கடந்த ஆண்டு தெரிவித்திருக்கின்றார். ஆனால், இன்று நிலைமை என்ன? அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீஞ்சூர் பகுதியில் காட்டுப்பாக்கம் என்கிற அந்தக் கிராமத்தில் கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், கடந்த உங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் அந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், சில வழக்குகளின் காரணமாக அந்தப் பணி அன்றைக்குத் தடைப்பட்டு, அது தொடங்கப்பட முடியாத நிலையிலே இருந்து வந்தது.

2006 ஆம் ஆண்டு ஐந்தாம் முறையாக நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இது ஏதோ அ.தி.மு.க. தொடங்கிய திட்டம் என்று உங்களைப்போல அதைக் கிடப்பிலே போட்டுவிடாமல்—இது குடிநீர்ப் பிரச்சினை. சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நமது முதல்வர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டு, அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு முறையாக tender–களெல்லாம் விடப்பட்டு, அந்தப் பணிக்கு முதல்வர் அவர்களுடைய ஆணையை ஏற்று, அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்று, அதைத் தொடர்ந்து அந்தப் பணிகளெல்லாம் நடந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அவர் சொன்னதைப்போல கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே நான் சொன்னது உண்மைதான். அந்த நிர்வாகம் அந்த வகையிலேதான் உறுதிமொழி தந்திருந்தது. ஆனால்,

அடிக்கடி கடல் சீற்றம் ஏற்படக்கூடிய காரணத்தால், தொழில்நுட்ப ரீதியாக அந்த நிர்வாகத்திற்கும் அந்தப் பணியை நிறைவேற்றுவதிலே கொஞ்சம் தடங்கல் ஏற்பட்டது உண்மை. ஆனால், சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த அளவிலே ஆற்ற வேண்டிய அத்தனை பணிகளையும் 100–க்கு 100 சதவிகிதம் முழுமையாக முடித்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் பணியை DBOOT என்ற அடிப்படையிலே நிறைவேற்றக்கூடிய அந்த நிர்வாகத்தின் பணியிலே கொஞ்சம் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அரசுக்கும், வாரியத்திற்கும் எந்தவித இழப்பும் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தொடர்ந்து அந்த சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை எங்களுடைய துறை அதிகாரிகளும், நானும் அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். பல முறை நேரிடையாகச் சென்று ஆய்வுப் பணியை நடத்தியிருக்கிறோம். நேற்றுக்கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரிடையாகச் சென்று ஆய்வுப் பணியை மேற்கொண்டு, எனக்கு செய்தி தந்திருக்கிறார்கள். வரக்கூடிய ஜூன் மாதம் இறுதியிலே அந்தக் குடிநீர்த் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, சென்னை மாநகர மக்களுக்கு 100 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. இரா. இராஜேந்திரன். (குறுக்கீடு) திரு. அன்பழகன், 24 நிமிடங்கள் உங்களுக்கு நான் கொடுத்திருக்கிறேன். போதும், விடுங்கள். திரு. இரா. இராஜேந்திரன்.

***திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் துணிவும், பேறிஞர் பெருந்தகை அண்ணாவின் கனிவும் ஒருங்கே பெற்று, தமிழ்ச் சமுதாயத்தின் விடிவெள்ளியாக, தமிழர்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்துகொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். என்னுடைய உரையிலே கடைசியாக எம்.எல்.டி. என்று சொல்வதற்குப் பதிலாக டி.எம்.சி. என்று சொல்லிவிட்டேன். தயவுசெய்து திருத்திக்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் துணிவும், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் கனிவும் ஒருங்கே பெற்று தமிழ்ச் சமுதாயத்தின் விடிவெள்ளியாக, தமிழர்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். நிதியமைச்சர் மாண்புமிகு இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். உழைப்பால், தியாகத்தால், திறமையால் உயர்ந்து நிற்கிற எங்கள் இளந்தலைவர் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஒரு முறை உள்ளாட்சி அமைப்புகளைப்பற்றி குறிப்பிடுகிறபோது, 'உண்மையான மக்களாட்சியின் அடித்தளம், ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் அமைந்திருப்பதை நான் நீண்ட பல ஆண்டுகளாக வலியுறுத்திக் கொண்டு வருபவன். பெரிய நாடாகிய நம் நாட்டில் நேரடியான மக்களாட்சி முறை இருக்கிற இந்த நாளில், மக்களாட்சி சீரிய முறையில் நடைபெற வேண்டுமாகில் அதன் அடித்தளத்தில் அதற்கு வலுவேற்றினாலொழிய மக்களாட்சி முறை செம்மையாக நடைபெற முடியாது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றில் நடக்கிற செம்மையான, பாங்கான காரியங்களின் மூலம்தான் மக்களாட்சியின் மாண்பினை நாம் பெற முடியும்' என்றார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மாநாடு ஒன்றில் சுமார் 40 ஆண்டு காலத்திற்கு முன்பு உரையாற்றுகிறபோது உள்ளாட்சி அமைப்புகளின் மீதுள்ள அளவு கடந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிற வகையில் உள்ளாட்சி நிறுவனங்கள் மக்களாட்சி முறையின் தொட்டில்கள் எனவும், போட்ட திட்டங்களை நிறைவேற்றும் செயற்களங்கள் எனவும், மக்களின் வசதியைப் பெருக்கவும், செயல் திட்டங்களை நிறைவேற்றவும் அவை அயராது பாடுபட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் சுமார் 650 பக்கங்களைக் கொண்டதாக உள்ளன. இதனைப் படித்துப் பார்க்கிறபோது துணை முதல்வர் அவர்கள் கடந்த 4 ஆண்டுகால ஆட்சியிலே இமாலய சாதனைகளை தமிழகத்திற்கு ஆற்றியிருக்கிறார்கள் என்பது நன்றாகப் புலப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேயர் பதவி பறிப்பு என்னும் கருப்புச் சட்டத்தின்மூலம் சென்னை மாநகராட்சி மேயர் பதவியைப் பறித்து திருப்தி அடைந்தவர்கள் உண்டு. ஆனால், இன்று 29 மாவட்ட ஊராட்சிகள், 12,620 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 561 பேரூராட்சிகள், 152 நகராட்சிகள், 10 மாநகராட்சிகள் என அனைத்து நிர்வாகங்களையும் திறம்பட நிர்வகித்து, இந்திய துணைக் கண்டத்தில் உள்ள பொருளாதார மேதைகள், நீதியரசர்கள், நல்ல உள்ளம் படைத்தவர்கள் எல்லாம் நமது துணை முதல்வரை பாராட்டுகிறபோது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

13–வது நிதிக் குழு 2009 ஆம் ஆண்டு சென்னை வந்தபோது, அதனுடைய தலைவர், பொருளாதார மேதை டாக்டர் விஜய் கேல்கர் "தமிழக அரசின் சிறப்பான செயல்பாடுகள் தமிழக மக்களுக்கு மட்டுமல்ல; நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையே மேம்படுத்தும் முன் மாதிரியாக உள்ளது" என்றும், இந்த மாநிலத்தில் சமூகப் பாதுகாப்பு அமைப்பு ஏழைகளுக்கு செய்து தரப்பட்டுள்ளது என்றும், "இம்மாநிலத்தின் நிதித் துறை செயல்பாடு பாராட்டத்தக்க வகையில் உள்ளது என்றும், கடனுக்கும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள விகிதம் எல்லா மாநிலங்களையும்விடக் குறைவாக உள்ளது, இவை அனைத்தும் பெரும் சாதனைகளாகும்" எனவும் பாராட்டியிருக்கிறார்.

அதைப்போல, "சாலைகள், பாலங்கள், குடிநீர் விநியோகம், சுகாதாரம் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் இந்த முன் முயற்சியின் முக்கியமான பிரிவுகளாக உள்ளன" எனவும் பாராட்டியிருக்கிறார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழ்நாடு மிகத் திறமையாக நிறைவேற்றி வருகிறது என்று பாராட்டியிருப்பது உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அரசின் மிகச் சிறந்த நிர்வாகத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரை கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்பதை சிந்தையில் கொண்டுள்ள முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் நூலகம், விளையாட்டு மைதானம், மேம்படுத்தப்பட்ட இடுகாடு, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், கான்கிரீட் தெருக்கள் அமைத்திட துணை முதல்வர் அவர்களுக்கு ஆணை வழங்கி 2011 ஆம் ஆண்டிற்குள் 12,620 ஊராட்சிகளும் தன்னிறைவு பெறுகிற வகையில் நிதியினை ஒதுக்கி பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை நாட்டு மக்கள் பாராட்டுகிற நிலையை இன்று காண முடிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் பகிர்ந்தளித்திட மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. எல்.சி. ஜெயின் அவர்கள் தலைமையில் 1996 ஆம் ஆண்டு முதலாவது உயர் நிலைக் குழுவும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் கோ.சி. மணி அவர்கள் தலைமையில் இரண்டாவது உயர் நிலைக் குழுவும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் தலைமையில் மூன்றாவது நிதிக் குழுவும், அந்தக் குழுவிலே முக்கிய வல்லுநர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் கொண்டு அமைக்கப்பட்டு, அந்த மூன்றாவது நிலைக் குழு அதனுடைய பரிந்துரைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சமர்ப்பித்திருக்கிறது. இன்றைக்கு மூன்றாவது உயர் நிலைக் குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே சிறந்த அதிகாரப் பகிர்வு, நிதிப் பகிர்வு இதற்காக நம்முடைய தமிழக அரசுக்கு Indian Institute of Public Administration என்ற நிறுவனம் தேசிய அளவிலே உள்ள மாநில அரசுகளின் நிர்வாகத் திறமைகளை எல்லாம் ஆராய்ந்து, அதனுடைய சிறந்த நிதிப் பகிர்வு, சிறந்த அதிகாரப் பகிர்வுக்கான விருதுகளை இன்றைக்குத் தமிழகத்திற்கு வழங்கவுள்ளது. இந்த இரண்டாவது விருதினை

மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் சார்பாக டெல்லியிலே நாளை நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பெறவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டு பணியாற்றுகிற உள்ளாட்சிப் பிரதிநிதிகளை ஊக்கப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் சிறந்த பணிகள், புதுமையான முயற்சிகளில் ஈடுபட்டு பணியாற்றியுள்ள ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது முதல்வர் கலைஞர் அவர்களால் வழங்கப்படுவது பாராட்டுதலுக்குரியது. விருது வழங்கப்படுகிறபோது ரூபாய் ஐந்து இலட்சம் வெகுமதியாகவும், கேடயமும், நற்சான்றிதழும், பதக்கமும் வழங்கப்படுவது, பொது மக்களுக்குப் பணியாற்றும் உள்ளம் கொண்டவர்களுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் ரூ.50,000 முதல் ரூ.5 இலட்சம் வரை ஊக்கத் தொகை மத்திய அரசினால் வழங்கப்படுவது பாராட்டுக்குரியது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்கிற பேரறிஞர் அண்ணாவின் கூற்றுக்கேற்ப, "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பயன்படுவதோடு, கிராமங்களில் உள்ள கால்வாய்கள், நீர்நிலைகள், சிற்றாறுகள் இப்படி மக்களுக்குப் பயனுள்ள பல்வேறு இடங்களைச் சீரமைக்கும் வகையில், மத்திய அரசின் உதவியோடு இந்தியத் துணைக் கண்டத்திலேயே இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலம் தமிழகம்" என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பாராட்டியுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் 56 சதவிகிதம் ஆதி திராவிடர்களும், 76 சதவிகிதம் பெண்களும் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்திற்காக 31–3–2010 வரை ரூ.3,352 கோடியே 58 இலட்சம் செலவிடப்பட்டிருப்பது பாராட்டுதலுக்குரியது.

முற்பகல் 11–30

1989 ஆம் ஆண்டு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் சுய உதவிக் குழுக்கள் எந்த நோக்கத்திற்காக தொடங்கப்பட்டனவோ, அந்த நோக்கம் முழுமையும் இங்கே நிறைவேறாத நிலையில் மெத்தனப்போக்கோடு பல ஆண்டுகள் இருந்த நிலையை எல்லாம் மாற்றி, எண்ணிய பணியை எண்ணியவாறு விரைந்து நிறைவேற்றுகிற துணை முதல்வர், அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்று, தனிச் சிறப்புக் கவனம் செலுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் 2,000 முதல் 5,000 பேர் என மகளிருக்கு, ஓய்வுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, 78 மணிநேரம் நின்றுகொண்டே சுழல் நிதியினை வழங்கி கின்னஸ் சாதனையில் இடம்பெறக்கூடிய அளவிற்கு பணியாற்றிய துணை முதல்வர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சமுதாயம் பாராட்டுகிறது. அதுமட்டுமல்ல, தலைவர் கலைஞர் வழியில் துணை முதல்வர் நடைபோடுகிறார் என்பதற்கு இந்த உதாரணம் ஒன்றே போதும். 1989 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான, 17 ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் உதவித் தொகை ரூ.1,765 கோடியாகும். ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் வழங்கப்பட்ட கடனுதவித் தொகை ரூபாய் 6,364 கோடியாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை 69,91,000 மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, 4,41,311 சுய உதவிக் குழுக்கள் இயங்குவதோடு, இந்தக் குழுக்களின் சேமிப்புத் தொகையும் ரூபாய் 2,568 கோடியாக உயர்ந்துள்ளது என்பது பிரமிக்க வைக்கிறது.

உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு என்று ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசாக தலைவர் கலைஞருடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கிக் கொண்டிருக்கிறார் நம்முடைய முதல்வர். இலவச வேட்டி, சேலைகளையும் வழங்குகிறார். இதோ, இப்போது தமிழகத்தில் குடிசைகளே இல்லாத நிலை அடுத்த ஆறு ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஆறு ஆண்டுகள் கழித்து, குடிசைகளைக்

காணவேண்டுமென்றால் பொருட்காட்சியில்தான் காணமுடியும் என்கிற நிலை ஏற்படும். இத்திட்டத்திற்கு மிகப்பெரும் நிதியாக இந்த நிதியாண்டில் ரூபாய் 1,800 கோடி நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருப்பதை மக்கள் நன்றி உணர்வோடு பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சமத்துவ நாயகர் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தையில் உதித்த சமத்துவபுரம் திட்டத்தின்மூலம், கடந்த மூன்று ஆண்டுகளில் சமத்துவபுரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு வீடுகள் இருந்தால்கூட அங்கே ஒரு கோயில் கட்டிவிடுவார்கள். ஆனால் தலைவர் கலைஞர் ஆட்சியில் ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் சமத்துவத்தை ஏற்படுத்திட, தந்தை பெரியார் சிலையை நிறுவி, தளபதி அவர்கள் திறந்து வைக்கிறார். 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை நிறுவப்பட்ட சமத்துவபுரங்களிலும் தந்தை பெரியார் சிலை நிறுவப்படுகிறது. இந்த நிதியாண்டு முடிவதற்குள் துணை முதல்வர் அவர்கள் அனைத்து சமத்துவபுரங்களையும் திறந்துவைக்க இருக்கிறார்கள்.

நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள்தோறும், அந்தந்த அலுவலகங்களில் ஒரு வாகனம் இருக்கும். அந்த வாகனத்தை ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் பயன்படுத்துவார்கள். சில நேரங்களில் உயரதிகாரிகள் பயன்படுத்துவார்கள். எப்போதாவது, சட்டமன்ற உறுப்பினர் வாகனம் கேட்டால் ஒரு நாளைக்குத் தருவார்கள். மக்கள் பிரதிநிதியாக இருக்கிற ஒன்றியக் குழுத் தலைவர், அதிகாரிகளிடம் வாகனத்தைக் கேட்டு இலவுகாத்த கிளியாக இருப்பார். இறுதியில் தேவையான நேரத்தில் மக்கள் பணியாற்ற வாகனம் கிடைக்காத நிலை. இதையெல்லாம் எண்ணிப்பார்த்த முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், துணை முதல்வருக்கு வாகனங்களை வாங்க வேண்டுமென்று ஆணையிட்டு, சென்னை இராஜரத்தினம் ஸ்டேடியத்திலே வாகனங்கள் வழங்குகிற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகிறபோது, துணை முதல்வரின் பணியாற்றும் பாங்கினைப் பார்த்து மெய்சிலிர்த்து மிகவும் பெருமை அடைகிறேன் என்று பாராட்டியது எங்கள் நெஞ்சில் என்றும் பசுமையாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

சில நேரங்களிலே சில அரசு அதிகாரிகள்மீது பணிகள் செய்யப்படவில்லை, பணிகளை நிறைவேற்றவில்லை என்று

கோபப்படக்கூடியவர்கள், உன்னை "தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றுவேன்" என்பார்கள். தண்ணியில்லாக் காடு என்றால் இராமநாதபுரம் மாவட்டம் நினைவிற்கு வரும். இன்று அந்த வாசகத்தைப் பொய்ப்பிக்கும் வகையில், அந்த நிலையையெல்லாம் மாற்றி ரூபாய் 613 கோடியில் மிக அற்புதமான கூட்டுக் குடிநீர் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் நிறைவேற்றி, இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல், திருச்சியிலிருந்து குடிநீர் கொண்டு செல்லுகிற வழியில், வழியோரப் பகுதி மக்களுக்கும் குடிநீர் தந்து தாகம் தீர்த்த முதல்வரையும், துணை முதல்வரையும், அந்தந்தப் பகுதி பொது மக்கள் நன்றியுணர்வோடு அதுவும் குறித்த காலத்திற்கு முன்னரே முடித்ததற்காக துணை முதல்வர் அவர்களையும் பாராட்டுகிற அந்தச் சிறப்பை நாம் காணமுடிகிறது.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார்" என்பதற்கேற்ப, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் தாகத்தைப் போக்குகிற நோக்கில், முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அந்த மாவட்டங்களில் காவிரி குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற ரூபாய் 1,929 கோடி நிதியினை ஒதுக்கி, அந்தப் பணியினை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தொடங்கிவைத்து, வெகு வேகமாகப் பணிகள் நடைபெறுவது கண்டு பொறாமைப்படுபவர்கள் உண்டு. ஆனால், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு துணை முதல்வரைப் பாராட்டுவது நமது கடமையாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தல்களிளெல்லாம் எங்கள் கூட்டணி வெற்றி பெற்றது. இரண்டு தினங்களுக்கு முன்பு, திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி பேரூராட்சியில் நடைபெற்ற 15 வார்டு தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி டெபாசிட் இழந்துள்ளது. நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுள்ளோம். பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் எங்கள் இயக்கத்தின் 100–வது சட்டமன்ற உறுப்பினரான சகோதரன் இன்பசேகரன் வெற்றி பெற்றிருப்பது, எதிர்காலத்தில் எங்கள் கூட்டணியின் வெற்றி தொடரும் என்பதற்கு முன்னோட்டமாக இருக்கிறதாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை எளிய மக்களின் வறுமையை ஒழிக்கவும், சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களையவும், செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் முக்கியமான திட்டமாகும். இத்திட்டம் 2006 முதல் உலக வங்கி நிதியுடன் ஆறு ஆண்டு காலத்திற்கு 717 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்மூலம் சமத்துவம், சமூகப் பொறுப்புணர்வு, பணித் திறன் ஆகியவை ஏற்படவும், ஏழை, மிகவும் ஏழை, மாற்றுத் திறன் படைத்தோர், நலிவுற்றோர் ஆகியோர் கிராம மக்கள் அமைப்புகளில் பங்கேற்கவும் வழிகண்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் மத்திய அரசின் "யுனிவர்சல் சுகாதார காப்பீட்டுத் திட்டமும்" சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை உலக வங்கியின் ஆய்வுக் குழு ஏழு முறை பாராட்டியிருப்பது மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் நிருவாகத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

292.94 கோடி ரூபாய் மதிப்பில் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சுனாமி அவசர கால உதவித் திட்டம், இதைப்போலவே ரூபாய் 716 கோடியில் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தருதல், பாதிப்புக்கு உள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் என முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் சுமார் ரூபாய் 670 கோடியிலும் செயல்படுத்தப்படுகிறது. 13–5–2006 வரை இத்திட்டத்திற்குச் செலவு செய்யப்பட்ட நிதி வெறும் ரூ.4.95 கோடிதான். ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அரசு தந்த உந்துகையினால், துணை முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியினால் ரூ.864 கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது.

தளபதி, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் எண்ணற்ற பாலங்களையெல்லாம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) தலைவர் கலைஞர் அவர்கள்மீதும், துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள்மீதும், அமைச்சர் அண்ணன் கோ.சி. மணி அவர்கள்மீதும் கடந்த ஆட்சியாளர்கள் வழக்குப் போட்டு மகிழ்ந்தார்கள். இன்று அந்த மகிழ்ச்சியை

இழந்து தவிக்கிறார்கள். இவ்வளவு பாலங்களைக் கட்டித் தந்துள்ள துணை முதல்வர் அவர்கள், பல்வேறு சாதனைகளுக்காக எவ்வளவோ விருதுகள் பெற்றிருந்தாலும், இந்தப் பாலங்கள் பணிகளுக்காகவும் தனியாக விருது வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவ்வளவு திட்டங்களையும் நிறைவேற்றி, உள்ளாட்சி, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள்வாயிலாக தமிழக மக்களுக்கு பொற்கால நிருவாகத்தைத் தந்ததோடு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதியையும் ஒதுக்கிய தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிற அதேவேளையில் சேலம் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களைத் தந்துள்ளீர்கள்.

எனது தொகுதியில் உள்ள பனமரத்துப்பட்டி ஏரியை சுற்றுலா மையமாக்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாநகரத்திலிருந்து வீராணம், வலசையூர் செல்லும் சாலையை சர்.பி.ட்டி. தியாகராயர் சாலை என பெயர் மாற்றம் செய்து அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். சேலம் நகர தொடர்வண்டி நிலையத்திலிருந்து சூரமங்கலம் சந்திப்பு வரை செல்லும் இரயில்வே லைனை கடந்து செல்ல முள்ளுவாடியில் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாநகரில் உள்ள *4* ரோடு, *5* ரோடு பகுதியில் மேம்பாலம் அமைத்துத் தந்திட கேட்டுக்கொள்கிறேன். வாழப்பாடியில் சிப்காட் தொழில் வளாகம் அமைத்துத் தந்திட வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு கிராமப்புற மக்களின்மீது அக்கறையில்லை என்று சொன்னார்; இன்னும் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொன்னார். இங்கே நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *2001*—லிருந்து *2006* வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒட்டுமொத்தமாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்குச் செலவு செய்யப்பட்ட தொகை *19,133.74* கோடி ரூபாயாகும். ஆனால், நம்முடைய

துணை முதல்வர் பொறுப்பேற்று 2006 முதல் 2010 வரை, கழக ஆட்சிக் காலத்தில் செலவு செய்யப்பட்ட தொகை 44,530 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 25,000 கோடி ரூபாய் இந்தத் துறைகளுக்கென அதிகமாகச் செலவு செய்திருக்கிற அரசு நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஆதரித்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம். உரையாற்ற உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அன்னை சோனியா காந்தி அம்மா அவர்களை வணங்கி, எங்களுடைய வழிகாட்டி, எங்களுடைய அன்புத் தலைவர் அய்யா ஜி.கே. வாசன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கும், அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், அண்ணன் ஞானசேகரன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, இந்தியாவிலேயே முதல் சிறந்த முதலமைச்சர் என்று சொல்லி எங்களது பாரதப் பிரதமர் பாராட்டிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, சிறந்த முறையில் உள்ளாட்சியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர், சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அருமை அண்ணன் பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–40

சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் 'கிராம ராஜ்ஜியமே ராம ராஜ்யம்' என்று சொன்னார்கள். கிராம வளர்ச்சிதான் உலக வளர்ச்சிக்கெல்லாம் உணவளிக்கக்கூடிய அடிப்படை ஆதாரமாக இருப்பதால் கிராம ஊராட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்கின்ற கொள்கையை மகாத்மா காந்தியடிகள் எடுத்துச் சொன்னார்கள். மகாத்மா காந்தியடிகள் சொன்னதை இந்த அரசு சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி பாராட்டுகின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மனுக்கள் குழுவின் தலைவர் என்ற முறையில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களை ஆய்வு செய்கின்றபோது தமிழகத்தில் உள்ளாட்சியில் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தி, தமிழக வரலாற்றில் ஒரு சிறப்பு மறுமலர்ச்சியை நமது துணை முதல்வர் ஏற்படுத்தியிருந்ததைப் பார்க்க முடிந்தது. பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம். தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் மேம்பாலங்களும், நெடுஞ்சாலைகளும், சாலைகளும் அற்புதமாக இருந்ததைப் பார்த்து நாங்கள் அத்தனை பேரும் பாராட்டினோம். இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இங்கே ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய அரசை பாரத . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த அவைக்கு ஓர் அறிவிப்பு. அவையில் உள்ள ஒலிபெருக்கிகள் மிகவும் நுட்பமானவை என்பதனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது மைக் அருகே சென்று பேசாமல் சற்றுத் தள்ளி நின்று பேசினால் நன்றாகக் கேட்கும். மிக அருகே சென்று பேசினால் ஒலி பிசிறும். எனவே, சிறிது தள்ளி நின்று உறுப்பினர் கோவை தங்கம் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசை, தமிழக அரசை, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞருடைய ஆட்சியை இந்தியாவிலே ஒரு சிறந்த முதலமைச்சர், சிறந்த ஆட்சி என்று சொல்லி பாரதப் பிரதமர் பாராட்டியிருக்கின்றார்கள். எங்களுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். கடந்த 13–3–2010 சட்டப்

பேரவையினுடைய திறப்பு விழாவிற்கு வருகை தந்த எங்களுடைய பாரதப் பிரதமர் அவர்கள், 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் இந்தியாவிலேயே முனைப்பாக, சிறப்பாகச் செயல்படுகின்ற அரசு தமிழ்நாடு அரசுதான்' என்று பாராட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றமும் பாராட்டியிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் இன்று தமிழகத்தில் இருக்கின்ற அரசு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மரியாதைக்குரிய துணை முதல்வர் அவர்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கி நிருவாகம் செய்யக்கூடிய அளவுக்குத் திறமையும், ஆற்றலும், உண்மையும், அரவணைப்பும் உடைய நல்ல பண்பாளர் என்பதை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் ஓரிரண்டு கருத்துகளை, இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 25 ஆண்டுகாலம், 30 ஆண்டுகாலம் துப்புரவுப் பணியாளர்களாக கிராமத்திலே பணிபுரிந்தவர்களுக்கெல்லாம் 715 ரூபாய்தான் சம்பளம் கிடைத்தது. ஆனால், கடந்த 1–6–2009 தேதியிலிருந்து நமது துணை முதல்வர் அவர்கள்தான் 25 ஆண்டுகாலம், 30 ஆண்டுகாலம் பணிபுரிந்த அந்த ஊராட்சித் தொழிலாளர்களுக்கு 1,290 ருபாய் வழங்கி அவர்கள் பாராட்டைப் பெற்றிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதேநேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பேரூராட்சிகளில் இன்று 8,000 ரூபாய் அதே துப்புரவுப் பணியாளர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், ஊராட்சியில் இருக்கின்ற துப்புரவுத் தொழிலாளர்கள் 1,290 ரூபாய்தான் வாங்குகிறார்கள். ஆகவே, பேரூராட்சிகளில் வழங்குவதைப்போல ஊராட்சிகளில் இருக்கின்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் நீங்கள் சம்பளத்தை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் பணிபுரிகின்ற அனைவருக்கும் ஒரே சம்பளத்தை வழங்குவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பொதுப் பணித் துறை கிராம உதவியாளர்கள், டிரைவர்கள், மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், கூட்டுறவுத் துறைகள், மின்சாரத் துறை, போக்குவரத்துத் துறை, சத்துணவு, அங்கன்வாடிகள், பல்கலைக்கழகங்கள், சாலைப்

பணியாளர்கள், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கும் மேல் தற்காலிகமாகப் பணிபுரிகின்றவர்களுக்கு நீங்கள் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாநகராட்சி, நகராட்சிகளின் கடன் தொகைகளை முழுவதுமாகத் தள்ளுபடி செய்ததைப்போல், பேரூராட்சிகளின் கடன்களையும் நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிகளுடைய வளர்ச்சிக்காக ஊராட்சிகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கி, ஊராட்சிகளின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாத் துறைகளுக்கும் துணை முதல்வர் என்ற முறையில், ஆதி திராவிட மக்கள் வாங்கிய தாட்கோ கடன்களை இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்கள் சிறு வணிகக் கடனாக 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்று கடன் பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு 18 சதவிகிதம் வட்டியிலிருந்து 6 சதவிகிதமாகக் குறைத்துள்ளீர்கள். அந்த 6 சதவிகிதம் வட்டியையும் நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில், வீடுகள் தீப்பற்றினாலும், வால்பாறை போன்ற பகுதியில் யானைகள் வீடுகளை இடித்துத் தள்ளினாலும், 2 ஆயிரம் ரூபாய்தான் வழங்குகின்றீர்கள். இந்தத் தொகை போதாது. 10 ஆயிரம் ரூபாயாக நீங்கள் அதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இங்கேயிருக்கின்ற வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். சின்கோனா, பெரியகல்லாறு போன்ற பகுதிகளில் இரண்டரை அடி பள்ளம் உள்ள சாலைகள் இருக்கின்றன. மாணவ, மாணவிகளும் தொழிலாளர்களும் பேருந்துகளிலே போக முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த சின்கோனா பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமாக சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வீணாக மண்ணிலே புதைந்துகொண்டிருக்கின்றன; புழுத்துப் போய், கெட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே, உடனடியாக வனத் துறை

அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, 5 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த மரங்களை விற்று அவர்கள் அந்தச் சாலைகளைப் போட முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மத்திய அரசு தொழிற்பயிற்சிப் பள்ளி ஒன்றை வால்பாறையிலே துவங்க முன்வந்திருக்கின்றது. அதற்காக 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். சக்திதலைநார் பகுதியில் இந்துஸ்தான் எஸ்டேட் சேர்த்து, வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமான 15 கிலோ மீட்டரில் 11 கிலோ மீட்டர் சாலையை வால்பாறை நகராட்சி நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்திருக்கின்றது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மற்ற தனியார்களும் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் இந்துஸ்தான் கல்லூரியைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு. கண்ணையன் என்பவர் 5 ஏக்கர் நிலத்தை தொழிற்பயிற்சிப் பள்ளி வைப்பதற்கு வழங்க முன்வந்திருக்கின்றார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய நீண்டகாலப் பிரச்சினையை, தொழிற்பயிற்சிப் பள்ளி மூலமாக நீக்க வேண்டுமென்று சொன்னால், அந்த நெடுஞ்சாலைத் துறை சார்பாக சாலை அமைத்தால்தான் அந்தக் கல்லூரி வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலும் நேரடியாகத் தெரியப்படுத்தியிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தனி சிறப்புக் கவனம் செலுத்தி, வால்பாறையில் தொழிற்பயிற்சிப் பள்ளி வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே சுமார் 55 இலட்சம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அந்த வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குப் புதிய திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோட்டூர் மூன்றாவது குடிநீர்த் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோட்டூர் பேரூராட்சியில் 40 ஆண்டு கால குழாய் ரிப்பேராக இருக்கிறது. அதில் 16-வது வார்டு ஆத்துப்பாறை முதல் ஜனசங்கம்பாறை வரை 5 கிலோ மீட்டர் பைப் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை தொகுதி உட்பட கோவை மாவட்ட விவசாயிகளிடமிருந்து தேங்காய்களை அரசே கொள்முதல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வால்பாறையில் தொடர்ந்து யானைகள், சிறுத்தைகள் உயிர்ச் சேதம் செய்து வருகின்றன. காரணம், தெரு விளக்குகள் இல்லாமல் இருப்பதால்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுதானே பார்த்தேன்!

திரு. கோவை தங்கம்: ஆகவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையின் சார்பாக 300 தெரு விளக்குகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, வால்பாறை தொகுதியிலுள்ள ஊராட்சிகளுக்குத் தலா 10 தெரு விளக்குகளைத் தந்துதவும்படி கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை தொகுதியில் ஊராட்சிகளுக்குப் போதுமான குடிநீர் வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உடனடியாக குடிநீர் வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வால்பாறையிலே ஒரு எரி மேடை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் சென்ற இரண்டு ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றேன். அந்த எரி மேடையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் மாவட்டமாக வந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் எத்தனை மணி நேரமானாலும் சரி, கடைசி வரை இருந்து, அந்த மகளிர் சுய உதவிக் குழுவினரை ஊக்குவிக்கின்ற வகையில், தன் கையாலேயே சுழல் நிதியைக் கொடுத்து, அவர்களை ஊக்குவித்து, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதைப் பாராட்டுகிறோம்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அமரமூர்த்தி, எரி மேடை வேண்டுமென்று கேட்கிறார். பார்த்துக்கொள்ளுங்கள்.

திரு. கோவை தங்கம்: தமிழகம் முழுவதிலும் உள்ள ஊராட்சிகளில் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிகளில் பணிபுரியும் டேங்க் ஆபரேட்டர்களுக்குப் பணி நிரந்தரம், சம்பள உயர்வு, பணி வரன்முறை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றம், ஆற்றுப் புறம்போக்கு, அணைப் புறம்போக்கு, குளம், குட்டை போன்ற பகுதிகளில் குடியிருக்கின்றவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக்கூடாது என்று கூறியிருக்கின்றது. ஆனால், தமிழ்நாடு முழுவதும் இலட்சக்கணக்கானவர்கள் குளப் பகுதிகளிலும், குட்டைப் பகுதிகளிலும், ஆற்றுப் புறம்போக்குப் பகுதிகளிலும், அணைப் பகுதிகளிலும்தான் குடியிருக்கின்றார்கள். ஆனால், அதே சமயத்தில் இப்போது அங்கே நீர் இல்லாத பகுதியாக இருக்கிறது. அணைப் பகுதியிலிருந்து நீண்ட தூரம், பல கிலோ மீட்டருக்கு தூரமாக குடியிருக்கின்றார்கள். குளத்துப் பகுதிகள் மூடப்பட்டிருக்கின்றன. குட்டைப் பகுதிகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளிலெல்லாம் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா தருவதற்கு இந்த அரசு உச்ச நீதிமன்றத்திலே மனு தாக்கல் செய்து, அந்த மனு மீது நடவடிக்கை எடுக்க வைத்து, ஆற்றுப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, அணைப் புறம்போக்கு ஆகிய பகுதிகளில் இருக்கின்ற ஏழையெளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட கூலித் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, வயது முதிர்ந்தவர்கள், விதவைகள், உடல் ஊனமுற்றவர்கள் போன்றவர்கள் உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் செய்து பல ஆண்டுகளாக இன்னும் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் O.A.P. உதவித் தொகை வழங்குவதற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகரில் மக்கள் தொகை மிகவும் அதிகமாக இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். ஆகவே, கோவை மாநகரத்தில் காந்திபுரம், இரயில் நிலையம், உக்கடம், ஒப்பனக்கார வீதி, இராஜ வீதி போன்ற பகுதிகளில் சுரங்கப் பாதை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையில் ஆதி திராவிட மக்களின் வளர்ச்சிக்காக, அந்த மானியக் கோரிக்கை நிதியாக வரலாறு காணாத அளவிற்கு 3,828 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அந்த மக்களின் சார்பாகப் பாராட்டுகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் இருக்கின்ற கான்டூர் கால்வாய் உடைந்தவுடன், நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடன் நான் தொடர்புகொண்டேன். அவர் வேலூரிலே அரசு நலத் திட்டங்கள் அறிவிக்கின்ற நிகழ்ச்சியிலே இருந்தார். தொலைபேசியிலே அருமை அண்ணன் திரு. சி. ஞானசேகரன் அவர்களைத் தொடர்புகொண்டு, கான்டூர் கால்வாய் மிகவும் பழுதடைந்துவிட்டதால் அங்கிருக்கின்ற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; ஆகவே, துணை முதல்வர் அவர்களோடு தொலைபேசியில் பேசவேண்டுமென்ற கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடத்தில் தொலைபேசியில் நான் பேசிய அடுத்த நிமிடத்தில், மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, செயலாளரை வைத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து பெரிதும் உதவி செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அவர்களுடைய பண்பையும், அவர்களுடைய குணத்தையும் மனப்பூர்வமாக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நாங்கள் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம். எந்த நேரத்திலும், எந்த நிமிடத்திலும் தொலைபேசியிலே மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடம் தொடர்புகொண்டால், நிச்சயமாக அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது, மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

21 இலட்சம் வீடுகள் கட்டித் தருகின்றோம் என்று ஒரு அற்புதமான திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இந்த அற்புதமான திட்டங்கள் செயல்படுகின்றபோது, இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் நம்முடைய தமிழக முதலமைச்சர் என்று சொல்லி இப்போது பாராட்டுவதைப்போல நிரந்தரமான பாராட்டுக்களைப் பெறுவார்கள்.

இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாரதப் பிரதமர் அவர்கள் துணை முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். அகில இந்தியத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள் பாராட்டுகிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைத்தான் ஏற்கெனவே சொல்லிவிட்டீர்களே!

திரு. கோவை தங்கம்: வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி என்ற பட்டத்தைப் பெற்றதைப் போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். இந்த அரசுக்கும், எனக்கும் துணையாக இருக்கிறார் என்று பாராட்டினார்கள். இந்த நேரத்திலே நாங்கள் சொல்வதெல்லாம், எங்களுக்கும் அவர் உறுதுணையாக இருந்து, காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவி புரிந்து வருகிறார் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரியலூர் தொகுதியில், அரியலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சரிவர இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11—55*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரியலூர் கூட்டா அல்லது பூட்டா?

திரு. கோவை தங்கம்: போளூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த துறை ரீதியாகக் கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Rope car பற்றிக் குறிப்பிடுங்கள்.

திரு. கோவை தங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் அற்புதமான துணை முதல்வர் எங்களுக்குக் கிடைத்திருக்கிறார். (குறுக்கீடு) நமக்குக் கிடைத்திருக்கிறார்.

2010 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிச் சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: தமிழ்நாடு முழுவதும் பம்பரம்போல் சுழன்று, துணை முதல்வர் அவர்கள் எந்த மாவட்டத்தில் இருக்கிறார் என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு, அற்புதமாகச் சுழன்று சுழன்று பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய வழிகாட்டி, எங்களுடைய அன்புமிக்க மக்கள் தளபதி திரு. ஜி.கே வாசன் அவர்கள் சொன்னார்கள். 'தளபதி ஸ்டாலின் அவர்கள் அற்புதமாக தமிழ்நாடு முழுவதும் சுழன்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். என்னுடைய அற்புதமான தலைவர், சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களும், அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், அண்ணன் ஞானசேகரன் அவர்களும் அடிக்கடி சொல்வார்கள். நமக்கு ஒரு நல்ல துணை முதலமைச்சர் கிடைத்திருக்கிறார். ஏன், நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும், நானும் பேசிக்கொண்டிருக்கின்ற போது அவர் குறிப்பிட்டுச் சொன்னார். 'ஒரு அருமையான துணை முதலமைச்சர் தந்தையைப்போல் செயலாற்றுகிறார்' என்று கூறினார். அதேபோல நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள், நம்முடைய பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் போன்று அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் நம்முடைய துணை முதலமைச்சரைப் பாராட்டினார்கள். பாராட்டுகின்றபோது 'உள்ளாட்சியில் இன்று தமிழகத்திலே ஒரு சிறப்பான நல்லாட்சியை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்' என்று நம்முடைய துணை முதல்வரைப் பாராட்டினார்கள். நான் இந்த நேரத்தில், அவர் இந்தத் துறைகளை மட்டுமல்ல, மற்ற எல்லா துறைகளையும் சேர்த்துக் கொடுத்தாலும் சரி, சிறப்பாகப் பணியாற்றி நல்ல பெயரைப் பெற்றுத் தருவார் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோவை தங்கம், நன்மாறன் எதுவும் சொல்லவில்லையா? அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் பேசுகின்றபோது தாட்கோ கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இங்கே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அவர் பேசுகின்றபோது குறுக்கிடக்கூடாது என்பதால், நான் இப்போது பதில் சொல்கின்றேன். தலைவர் கலைஞர் அவர்கள் கவர்னர் உரையிலேயே, தாட்கோ கடன் *83* கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள். எப்படி விவசாயப் பெருங்குடி மக்களுடைய கடனான *7,000* கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தார்களோ, அதைப்போல் ஆதி திராவிட மக்களுடைய தாட்கோ கடன் *83* கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்த ஒரே முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய இரண்டு துறைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்களுடைய தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய இளைஞர்களுடைய எழுச்சி நாயகன் சின்ன அய்யா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொண்டு, (குறுக்கீடு) எங்களுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தம்பி வேல்முருகன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு கலைஞர் வீட்டு வசதித் திட்டம், சென்னை நதிகள் சீரமைப்பு, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிதாக அமைத்தல் மற்றும் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கல் போன்ற திட்டங்களை நான் உளமாரப் பாராட்டுகிறேன். இந்தத் துறைகளுக்குப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இப்போது பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே மிகச் சிறப்பான திட்டமான கலைஞர் வீட்டு வசதித் திட்டம் மிகச் சிறப்பாக, ஆறு ஆண்டுகளில் திறம்பட செயலாற்றி, குடிசைகளே இல்லாத வீடுகளாக மாற்றுவோம் என்கிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற குடிசை வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதில் இந்த ஆண்டே எவ்வளவு வீடுகள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், அது எவ்வளவு விரைவாகச் செயல்படும் என்ற அறிக்கையை நம்முடைய அரசு தெரிவிக்குமா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

அதேபோல, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இந்த திட்டப் பணிகள் இன்றைக்கு அனைத்துக் கிராமங்களிலும் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்தத் திட்டத்திலே பணியாற்றுகின்ற அலுவலர்கள், ஊழியர்களெல்லாம் சற்று சிரமத்தில் இருக்கிறார்கள். இந்தத் திட்டம் அதிகமான நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது; ஆனால், அதற்கான பணியாளர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். Technical side–லும், Administration side–லும் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்கின்ற குறை இருக்கிறது. ஆகவே, கூடுதலாக அலுவலர்களை நியமித்தால் சிறப்பாக இருக்குமென்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், கலைஞர் வீட்டு வசதித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் பணிகளைக் கவனிப்பதற்கு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கூடுதலாக ஒரு ஆணையரை நியமித்தால் வேலைப் பளு குறையும் என்று அங்கே பணிபுரிகின்ற ஆணையாளர் உள்ளிட்ட பெரும்பாலான ஊழியர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதையும் நம்முடைய அரசு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னை நதிகள் சீரமைப்புத் திட்டம். சிங்கப்பூர் கூட்டுறவு முகவர் நிறுவனத்துடன் இணைந்து ஓர் ஒப்பந்தத்தை, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிங்கப்பூருக்கே சென்று, அந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் ஆய்ந்து வந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு இதே பேரவையிலே பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே நான் பேசுகிறபோது,

"தமிழ்நாட்டிலே சென்னையில் ஓடுகின்ற ஆறுகள் மட்டும் கருப்பு ஆறுகளாக இருக்கின்றன" என்ற ஒரு கருத்தை வைத்தேன். அதைக் களைகின்ற வகையிலே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் சென்னை நகர மக்களுக்கு ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்பதிலே இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

அதேபோல, தமிழகத்திலே உள்ளாட்சிகளிலே, கிராம ஊராட்சிகளிலே இன்றைக்கு மூன்றடுக்கு முறை இருந்து கொண்டிருக்கிறது. அது மிகப் பெரிய சிக்கலான மூன்றடுக்கு முறையாக இருந்து கொண்டிருக்கிறது. இதை இரண்டடுக்கு முறையாக மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறீர்கள். வரும் உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக அதைச் சீர் செய்வதற்கு முயற்சியெடுத்து, அதற்கான தீர்மானத்தை அரசு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஊராட்சி வார்டுகளிலே ஒரே வார்டு என்று சொன்னால், அங்கே இரண்டு உறுப்பினர்கள், மூன்று உறுப்பினர்கள், நான்கு உறுப்பினர்கள் இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற உறுப்பினர்களுக்கிடையே போட்டி இருக்கிறது. இந்தத் தெருவிற்கு யார், அந்தத் தெருவிற்கு யார் என்ற பிரச்சினை இருக்கிறது. எனவே, வார்டுகளைப் பிரிக்கும்போது, வார்டுக்கு ஓர் உறுப்பினர் என்ற முறை மிகச் சிறப்பான முறை என்று தமிழகத்திலே பேசப்படுகிறது. எனவே, அடுத்த தேர்தலுக்கு முன்பாக இதைச் செய்வதற்கு அரசு வழி வகுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஊராட்சிகளுக்கு நிதியாதாரம் போதவில்லை என்கிற குறைபாடு தமிழகம் முழுவதும் இருக்கிறது. எனவே, ஒவ்வொரு ஊராட்சிக்கும் புதிதாக நிதி வருவாய் வருவதற்கான புதிய திட்டங்களை அரசு கொண்டு வருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே சென்னையைப் பொறுத்தவரையிலே இரண்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம். அதிலே ஒன்று மீஞ்சூரிலே காட்டுப்பாக்கம் கிராமத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைப் பற்றிக்கூட நம்முடைய

உறுப்பினர் அவர்கள் மிகச் சிறப்பாக இங்கே சொன்னார்கள். அதேபோன்று, எங்கள் மாவட்டத்தில் நெம்மேலி கிராமத்திலே இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. அந்த இடம்கூட, அறநிலையத் துறைக்குச் சொந்தமான நெம்மேலி, அருள்மிகு ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளைக்குச் சொந்தமான இடத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்கு வாடகை ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்து வருகின்ற நீண்ட காலப் பிரச்சினை என்னவென்றால், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். கடந்த 2008 ஆம் ஆண்டிலே அந்தத் திட்டத்திற்கு 1,334 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, இப்பொழுது திருத்திய மதிப்பீடாக மீண்டும் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிற தொகை, இந்த ஆண்டு 29-1-2010-லே 1,928.8 கோடி ரூபாய். இதில் ஐந்து தொகுப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதில் ஒரு தொகுப்பில் மட்டும்தான் பணிகள் தொடங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எஞ்சியிருக்கிற பணிகளெல்லாம் உடனடியாகத் தொடங்கப்படுமா? இந்தப் பகுதியில் உள்ள கிராமங்களெல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. தேர்தல் நடந்தபோது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் தேர்தல் பணியாற்றியிருக்கிறோம். அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் குடிநீருக்கு மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தை மிகவும் விரைவாக நிறைவேற்றுவதற்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டும். எந்தச் சிக்கல் இருந்தாலும், இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்ட மக்களுக்கு ஃபுளோரைடு கலந்த நீரை இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் பல்வேறு நோய்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அவற்றைத் தடுப்பதற்கான முயற்சியை வெகுவிரைவிலே நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வறட்சி மிகுந்த வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கிய நிதி போதாது என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அதை அதிகப்படுத்த வேண்டும். அதேபோன்று,

காஞ்சிபுரம் மாவட்டத்திலும் வறட்சியாலே பல்வேறு பகுதிகளில், குறிப்பாக என்னுடைய தொகுதியிலெல்லாம் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, செங்கல்பட்டு நகரில் குடிநீர்ப் பிரச்சினை தீராத தலைவலியாக இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு அரசு சிறப்பு முயற்சி எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—05

அதேபோன்று, பிளாஸ்டிக் குப்பைகள். பெருநகரங்கள், வளர்ந்து வருகின்ற நகரங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் உள்ளிட்ட நகரப் பகுதியாக இருக்கின்ற பகுதிகளிலெல்லாம் பிளாஸ்டிக் அகற்றுவது, மிகப் பெரிய பொருட்களை அகற்றுவதென்பது ஒரு சிக்கலான விஷயமாக இருந்துகொண்டிருக்கிறது. பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைத் தடை செய்வதற்கான, குறைப்பதற்கான முயற்சியை, பொது மக்கள் மத்தியிலே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இந்த பிளாஸ்டிக் பொருட்களைக் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைப்பதற்கான விழிப்புணர்வை அரசு ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கிராம சபைக் கூட்டங்கள். கிராம சபைக் கூட்டம் வருடத்திற்கு நான்கு முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராம சபைக் கூட்டங்களிலே நம்முடைய கிராமத்திலிருக்கிற பொது மக்களுக்கு, அரசின் அறிவிப்பாக இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவிப்பாக இருந்தாலும்கூட கீழ் நிலையில் இருப்பவர்களுக்கு, இன்னும் முறையாக அனைத்து வீடுகளுக்கும் சென்று சேருவதில்லை என்ற குறை இருக்கிறது. நாங்கள் கலந்துகொள்கிற கிராம சபைக் கூட்டங்களிலே இந்தக் குறைபாடுகளை நாங்கள் கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே, இதற்கு சிறப்புக் கவனம் எடுத்து, அந்தக் கிராமத்திற்கு, அந்த ஊராட்சிக்கு அத்தியாவசியத் தேவையான அத்தனை பணிகளுக்கும் அங்கீகாரம் கொடுக்க வேண்டிய முதல் இடத்தில் இருப்பது கிராம சபைக் கூட்டங்கள். ஆனால், அந்தக் கிராம சபைக் கூட்டங்கள் அரசு எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லை. எனவே, அவை மீண்டும் சுறுசுறுப்பாகச்

செயலாற்றுவதற்கு, அறிவிப்புகள் கொடுத்து பொது மக்களைக் கவருவதற்கான பணிகளை அரசு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உள்ளாட்சியிலே இருக்கக்கூடிய எல்லை வரையறை பற்றி அரசு சொல்லியிருக்கிறது. இது தேவையான ஒன்று. ஏனென்றால், நிருவாக விஷயத்திலே ஒரே தொகுதியிலே, ஒரு எம்.எல்.ஏ.வுக்கு மூன்று ஒன்றியங்கள், இரண்டு பேரூராட்சிகள் என பல கோணங்கள் இருக்கின்றன. அந்த எல்லை வரையறையை உடனடியாக அரசு செய்தால், வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களது எல்லைப் பகுதியிலே பணியாற்றுவதற்குச் சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, சென்னையை ஒட்டியுள்ள மிகப் பெரிய பகுதிகளாக இருக்கின்ற அம்பத்தூர், தாம்பரம் பகுதிகளைத் தனியாக மாநகராட்சிகளாக ஆக்குங்கள் என்று நாங்கள் தொடர்ந்து சொல்லி வருகிறோம். ஏனென்று சொன்னால், தாம்பரத்தைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தாம்பரம் வட்டமும், அதேபோன்று சோழிங்கநல்லூர் வட்டமும் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு வட்டங்களையும் மாநகராட்சியுடன் சேர்க்காமல், தனியாக மாநகராட்சி ஆக்கினால் அது மிகப் பெரிய—இன்றைக்கு மக்கள்தொகை அதிகமாகிக்கொண்டிருக்கிறது, வளர்ந்து வரும் சென்னையை ஒட்டியிருக்கிறது, எனவே, தாம்பரத்தை மாநகராட்சியாக அறிவித்தால்—அந்தப் பகுதியிலே அடிப்படை வசதி செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளான போரூர், நந்தம்பாக்கம், சிட்லப்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை போன்ற பல்வேறு பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்கெல்லாம் இப்பொழுது பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இதேபோன்று தனித் தனியாகக் கொண்டு வராமல், இதையெல்லாம் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சி அமைத்தால், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, அதாவது கழிவு நீர் அகற்றுவது எங்கு, உதாரணத்திற்கு பெருங்களத்தூர் பேரூராட்சியாக இருந்தால், பீர்க்கன்கரணைக்குச் செல்ல வேண்டும்; பீர்க்கன்கரணை

நகராட்சியிலிருந்து மாடம்பாக்கம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இதையெல்லாம் ஒன்றிணைத்து ஒரே மாதிரியான நிலையைக் கொண்டு வந்தால், மாநகராட்சியாக மாற்றினால், திடக் கழிவு மேலாண்மைக்கும், கழிவு நீர் அகற்றுவதற்கும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, அம்பத்தூரைச் சுற்றியிருக்கிற பகுதி, அம்பத்தூர் வட்டத்தைச் சுற்றியிருக்கிற அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் இணைத்து, அம்பத்தூரை மாநகராட்சியாக மாற்றினால், அந்தப் பகுதியில் இருக்கிற பிரச்சினையைத் தீர்க்க முடியும். மதுரவாயல் போன்ற பகுதிகளுக்கெல்லாம் தனித் தனியாகத் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். குடிநீர் வசதி, கழிவு நீர் அகற்றுவது போன்ற திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். இவற்றையெல்லாம் ஒன்றிணைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, நகரங்களில் போக்குவரத்து நெரிசல் என்பது மாநகரத்தில் மட்டுமல்ல நகராட்சியிலும் இருக்கிறது. இதற்கு முழுமையான காரணம் என்னவென்று சொன்னால், இப்பொழுது பெரும் சாலைகளை அகலப்படுத்த வேண்டும் அல்லது புதியதாக குறுகலான சாலைகளை, பக்கத்திலே இருக்கின்ற சாலைகளுக்கு ஒருவழிப் பாதையாக மாற்றுவது போன்ற திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சென்னை மாநகராட்சிப் பள்ளி என்ற பெயரில் இயங்கி வந்த பள்ளிகள் தற்பொழுது மாநகராட்சிப் பள்ளிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சி என்று சொன்னால், அது நன்றாக இருக்கும் என்று பொது மக்கள் சொல்கிறார்கள். ஏனென்றால், சென்னையிலே படிக்கின்ற மாணவர்கள் சென்னை மாநகராட்சியிலே படிக்கிறேன் என்ற ஒரு நல்ல தெம்போடு படிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, சென்னை மாநகராட்சிப் பள்ளி என்று மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, முழு சுகாதாரத் திட்டம். இன்றைக்கு தனிநபர் கழிவறைகளெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. முழு சுகாதாரத்

திட்டம் இன்றைக்கு அனைத்து ஊராட்சிகளுக்கும், அனைத்துக் கிராமங்களுக்கும், வீடுகளுக்கும் தேவை. ஆனால், அந்தத் திட்டங்களுக்குக் கொடுக்கப்படுகிற நிதி ஆதாரம் இரண்டாயிரத்து சொச்சம் என்று இருக்கிறது. இது போதவில்லை. அங்கு வெறும் sanitary பொருட்கள் மட்டும் வாங்கி வைத்தால் போதாது. ஏனென்றால், கிராமங்களில் பொருளாதார நெருக்கடி இருக்கிறது. எனவே, அந்தக் கழிவுகளைச் சேமிப்பதற்கான தொட்டிகளையும் கட்ட வேண்டும். இதுபோன்ற பணிகளைச் செய்வதற்கு கூடுதலான நிதியை ஒதுக்கி, அதற்குத் திட்ட மதிப்பீடு தயாரித்து, ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சம் வீடுகளுக்குப் பண்ண வேண்டுமென்று இலக்கு வைக்கிறோம். அதிலே 50,000 வீடுகளுக்குப் பண்ணினால்கூட பரவாயில்லை. நிரந்தரமான கழிவறைகளைக் கட்டினால், அவர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். இன்றைக்குப் பெயரளவிலே கட்டிவிட்டோம். அங்கேயிருக்கிற B.D.O., அல்லது Engineer–ஐயோ அல்லது அங்கே technical side–ல் இருக்கிறவர்களையோ கேட்டால், வைத்துவிட்டோம், அவ்வளவுதான் முடிந்துவிட்டது என்கிற நிலைமை உள்ளது. அது முழுமையாகப் பயன்பெறவில்லை. எனவே, இதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் கருத்தில்கொண்டு, தனி நபர் கழிவறைகளை முழுமையாக அமைத்துக்கொள்வதற்கான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

இப்பொழுது தமிழகத்தில் பல்வேறு பேரூராட்சிகள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. ஆனால், பேரூராட்சிகளில் norms–படி ஊழியர்கள் இருக்கிறார்கள். மூன்றாம் நிலை நகராட்சிக்கு norms–படி ஊழியர்களை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு மறைமலை நகர் நகராட்சி வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகராட்சியாக, சென்னைக்கு அடுத்து புறநகர்ப் பகுதியில் இருந்துகொண்டிக்கிறது. அந்த நகராட்சிக்குப் போதிய இடமிருக்கிறது. ஏனென்று சொன்னால், 52 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நகராட்சியாக இருக்கிறது. போதிய நிதியிருக்கிறது. ஆனால், அங்கே ஊழியர்கள் மிகக் குறைவாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை சிறப்பு நிலை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய செங்கல்பட்டு நகராட்சியைப் பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது இடியாப்பச் சிக்கல் நிறைந்த நகராட்சியாக இருந்துகொண்டிருக்கின்றது. செங்கல்பட்டு நகராட்சி செயலிழந்து, மிக மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கின்றது. குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை, ஏற்கெனவே சொன்னேன்.

அதேபோன்று, திடக் கழிவு மேலாண்மை சரியாகச் செய்ய முடியவில்லை. விளக்குகள் சரியாக எரிவதில்லை. இப்படி அடிப்படைத் தேவைகளே இல்லை. அங்கு இருக்கிற அதிகாரிகளும் மிக மெத்தனமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். முதன்மையாக இருக்கிற ஒரு அதிகாரி அங்கே வேலைக்கு வருவதேயில்லை. உடனடியாக சிறந்த ஒரு நிருவாக அதிகாரியை நியமிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கட்சிகளைப் பார்க்க வேண்டாம். அங்கு இருக்கிற மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் உள்ளன. எனவே, அவற்றை உடனடியாகச் செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயிருக்கிற பிரச்சினைகளை உடனடியாக உயரதிகாரிகளும், நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் தலையிட்டு— செங்கல்பட்டு நகராட்சி என்பது பழமையான நகராட்சி. காஞ்சிபுரம் மாவட்டத்திலே, காஞ்சிபுரத்திற்கு அடுத்து மிகப் பெரிய நகராட்சியாக இருந்தது. பாரம்பரிய வரலாற்றுச் சிறப்புமிக்க நகராட்சி இன்றைக்கு மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம்—இந்த நகராட்சியை சிறப்பாக இயக்க வேண்டும். அங்கே குடி தண்ணீர் பிரச்சினை. பாலாற்றங்கரைமீது இன்றைக்கு நகராட்சி இருக்கிறது. பாலாறு சென்னை மாவட்டத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறது, ஆனால் செங்கல்பட்டு நகரத்திற்குத் தண்ணீரே போதவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வருகிறது. இதை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கவனத்தில் எடுத்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: தொகுதிப் பிரச்சினைதான், வேறொன்றும் இல்லை. மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்

இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் சமத்துவபுரம் இல்லை. மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், செங்கல்பட்டு தொகுதியிலே சமத்துவபுரத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புறவழிச் சாலைகளிலே புளிப்பாக்கம் சந்திப்பில் விரைவுப் பேருந்துகள் நின்று செல்ல ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருக்கழுக்குன்றம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்பாக்கம் அணுமின் நிலையக் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஊராட்சிகளான புதுப்பட்டினம், சதுரங்கப்பட்டினம் ஆகிய ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே இருக்கிற நகரின் மையப் பகுதியாக இருக்கிற போக்குவரத்துப் பணிமனை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தப் போக்குவரத்துப் பணிமனையால் அங்கே ஏராளமான வாகன நெரிசல் ஏற்படுகிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் போக்குவதற்கு ஆலப்பாக்கம் பகுதியிலே ஏற்கெனவே நான் அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். 5 ஏக்கர் நிலமிருக்கிறது, அதில் அந்தப் பணிமனையை மாற்றினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

அதேபோன்று மாமல்லபுரத்திலே பேருந்து நிலையம் அமைக்கும் பணி உடனடியாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வழியாக திருக்கழுக்குன்றம், தாம்பரத்திலிருந்து மணப்பாக்கம், தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வழியாக பொன்விளைந்தகளத்தூர் ஆகிய பகுதிகளுக்கு மாநகரப் பேருந்துகளை இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு I.T.I.–ல் சுற்றுச் சுவர் இல்லை. அந்த I.T.I. அதிக பரப்பளவு கொண்டதாக இருக்கிறது. ஆனால், அதற்கான மதிற்சுவர் அமைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: சீக்கிரம் முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். என்னுடைய திருக்கழுக்குன்றம் தொகுதியிலே இருக்கின்ற நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. அது மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும், மாமல்லபுரத்தில் சிற்பிகள் பூங்கா அமைக்கப்படுமென்று அறிவித்தீர்கள். அது இன்னும் அமைக்கப்படவில்லை. அதனை அமைத்துத் தருமாறு நான் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாமல்லபுரத்திலே சிற்பக் கலை அழியுமோ என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், 8–வது படித்த மாணவர்கள்கூட, டிப்ளமோ படித்துவிட்டு வந்தவர்கள்தான் இன்றைக்கு அங்கே சிற்பக் கலைக்கூடங்களை வைத்திருக்கிறார்கள். அங்கே 300–க்கும் மேற்பட்ட சிற்பக் கலைக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கேயிருந்த டிப்ளமோ படிப்பு எடுக்கப்பட்டுவிட்டது. இன்றைக்குத் தரம் உயர்த்துகிறோம் என்ற நிலையிலே, அங்கேயிருக்கிற ஒரு சில பேராசிரியர்கள் அதற்குக் கருத்துரு அனுப்பி, இன்றைக்கு அதைக் கல்லூரியாக மாற்றிவிட்டார்கள். ஆனால், எட்டாவது படித்தவர்கள்கூட சிற்பக் கலையிலே வல்லுநர்களாக வந்தவர்கள்தான் இன்றைக்கு வெளிநாடுகளிலே ஏராளமாகப் பணியாற்றுகிறார்கள். இங்கிருந்து கோடிக்கணக்கான. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: கடைசி; அவ்வளவுதான், முடித்துவிடுகிறேன். இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் வருகிற சிற்பக் கலைத் தொழில் அழியுமோ என்ற எண்ணமிருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அதில் சிறப்புக் கவனம் செலுத்தி, அங்கே டிப்ளமோ படிப்புக்கு ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் திமிரி பேரூராட்சிக்கு பஸ் நிலையம் இல்லை. இது

நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. எனவே, இந்த ஆண்டே பஸ் நிலையம் அமைக்குமாறு கேட்டு, இந்த வாய்ப்பினை நல்கிய அனைவருக்கும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள். 10 நிமிடங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) டாக்டர் (திருமதி) காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் ஒரு மிகப் பெரிய நீண்ட பட்டியலைச் சொல்லி, இவர்கள் எல்லோரும் துணை முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். எப்பொழுதும் பெண்களை விட்டுவிடுவதுபோல் இந்தத் தடவையும் அவர் விட்டுவிட்டார். ஆகையால் நான் சொல்கிறேன். பெண் சட்டமன்ற உறுப்பினர்களும் அவரைப் பாராட்டிக்கொண்டுதான் இருக்கின்றோம். அதைவிட மிக முக்கியமாக, இந்தத் தமிழகத்திலுள்ள சுய உதவிக் குழுவில் உள்ள பெண்கள் எல்லோரும், 3 கோடிப் பெண்களும் அவர் பக்கம்தான் இருக்கின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, முந்தைய ஆட்சியில் S.S.T. training–க்கு அவர்கள் எல்லோருக்கும் 7 ரூபாய் வழங்கப்பட்டது. இன்றையதினம் 45 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல் சுழல் நிதி, அது 6 மாதம் ஆன குழுக்களுக்கு 10,000 ரூபாயாக துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோல், ஏராளமான loan facilities. ஆகையால் பெண்கள் எல்லோரும் பாராட்டிக்கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பின்பு, ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், கிராமச் சாலைகளையும் உள்ளாட்சி நிர்வாகமே செய்யும் என்று உத்தரவிட்டீர்கள். அதன்படி இன்றைக்கு தமிழகத்திலே பல ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி இல்லாமல்

பல கிராமச் சாலைகளைச் செய்ய முடியாத சூழ்நிலையிருக்கிறது. அதற்கு பாரத் நிர்மாண் திட்டத்திலும், நபார்டு வங்கியின்மூலமும் செய்யலாம் என்று கூறுவார்கள். அதற்குப் பல விதிமுறைகள் தடுக்கின்றன. இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இடையே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செய்வீர்களா, செய்யமாட்டீர்களா என்று கேளுங்கள்.

திரு. போ. சின்னப்பன்: இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையிலுள்ள சாலைகளைச் செய்யமுடியவில்லை. இரண்டு மாவட்டங்களுக்கிடையிலுள்ள சாலைகளைச் செய்யமுடியவில்லை. ஆகையால் (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலே நெடுஞ்சாலைத் துறை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: இப்பொழுது நேரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். அப்பொழுது கூப்பிட்டதிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ளவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் கரெக்டாக எழுதியிருக்கிறேன். ஆனால் நீங்கள் 10 நிமிடங்களில் முடிக்கவேண்டும். அதுதான் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம்.

திரு. சி. கோவிந்தசாமி: நான் இரண்டு நாட்களுக்கு சேர்ந்து ஒரே ஆள்தான். அதனால் இரண்டு நிமிடங்கள் சேர்த்து கூடுதலாக கொடுக்கவேண்டுமென்று முதலிலேயே விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜனநாயகத்தில் எல்லோருக்கும்தான் நேரம்.

***திரு. சி. கோவிந்தசாமி:** ஜனநாயகப்பூர்வமாகவே கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இங்கே சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த உள்ளாட்சி அமைப்பில் பொதுவாக ஒரு பெரும் முன்னேற்றம் உருவாக்க வேண்டுமென்பதற்காக

2010 ஏப்ரல் 23] [திரு. சி. கோவிந்தசாமி]

முனைப்போடு செயலாற்றி வருகிற நம்முடைய துணை முதல்வர் அவர்களுக்கு முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, நம்முடைய நகர்ப்புற ஊராட்சிப் பகுதிகளில் இன்றைய தேவைக்கேற்ப ஒரு புதிய சட்டம் உருவாக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 1994 ஆம் ஆண்டு ஊராட்சிப் பகுதிகளுக்கென ஒரு தனிச் சட்டம் உருவாக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் உருவாக்கிய நகர்பாலிகா சட்டத்தைத் தொடர்ந்து தமிழகத்திற்கு ஏற்ற உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகளுக்கான ஒரு சட்டம் தேவைப்படுகிறது. அதைக் கொண்டு வர முயற்சி நடந்து இடையிலே அது நின்றுவிட்டதாக அறிகிறேன். ஆகவே இன்றும்கூட 1919 ஆம் ஆண்டு சட்டம்தான் சென்னை மாநகராட்சிக்கும்; 1920 ஆம் ஆண்டு சட்டம்தான் தமிழ்நாட்டினுடைய இதர மாநகராட்சி, நகராட்சிகளுக்கும் இருக்கிறது. அதை மாற்றி ஒரு புதிய சட்டம் கொண்டுவரவேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது மாநில வரி வருவாயில் 10 சதவிகிதம் உள்ளாட்சிப் அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக, ஏற்கெனவே முறையாகக் கிடைத்த கேளிக்கை வரி, முத்திரைத்தாள், பத்திரப் பதிவு போன்ற வரிகள் முறையாக இன்றையதினம் அவற்றுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, கிடைக்கும் அந்த 10 சதவிகிதம் தொகையும்கூட நேராக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைப்பதில்லை. மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கப்படுகிறது. மாவட்ட நிர்வாகம் மின்சாரக் கட்டணம் போன்ற பல்வேறு பழைய பாக்கிகளையெல்லாம் பிடித்துக்கொண்டு மீதியிருந்தால்தான் ஊராட்சிப் பகுதிகளுக்கு நிதி வழங்குகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அரசு, நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய மூன்றாவது நிதி கமிஷன் பரிந்துரை செய்த அடிப்படையிலே நிதியும், அதிகாரமும் ஊராட்சி அமைப்புகளுக்கு குறைவாக இருக்கிறது என்பதை கவனத்தில்கொண்டு மாநில அரசினுடைய வரி வருவாயில் 30 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—20

உள்ளாட்சி நிதியில் பெரும் பகுதி ஊழியர்களுடைய ஊதியத்திற்கே செலவிட வேண்டிய நிலைமை இன்றைக்கு நிலவி வருகிறது. பல ஊராட்சிகளில் ஊதியம்கூட வழங்க முடியாத

நிலையால் ஊழியர்களும் பாதிக்கப்படுகிறார்கள், பணிகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே, உள்ளாட்சியில் பணியாற்றுகிற ஊழியர்கள் அனைவருக்கும் அரசே ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பட்டியல் உண்மையிலேயே அது முழுமையான குளறுபடியான ஒரு பட்டியலாகத்தான் தற்போது இருக்கிறது. அரசு நலத் திட்டங்களை ஏராளமாக அறிவிக்கிறீர்கள். அந்த நலத் திட்டங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு இந்த வறுமைக்கோட்டுப் பட்டியல் பெரும் தடையாக இருக்கிறது. ஆகவே புதியதாக உள்ளாட்சி அமைப்புகளின்மூலமாகவே முறையான ஒரு பட்டியல் தயாரித்து, அரசு நலத் திட்ட உதவிகள் முறையாகப் போய்ச் சேர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிகளில் ஓர் ஊழலற்ற நிர்வாகத்தை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி தலைமையில் ஊழல் தடுப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். கேரளாவில் அதுபோன்ற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அது உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அதிகாரிகள் உள்ளிட்டு வருகிற குற்றச்சாட்டுகளை விசாரித்து, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க அது பயன்படும். அதற்குரிய ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உள்ளாட்சித் தேர்தல்கள் நேர்மையாகவும், அமைதியாகவும் நடப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நகராட்சித் தலைவர், பேரூராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுடைய தலைவர்களை மக்களே நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு நடைமுறையைக் கொண்டு வருவதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளும், அதில் பணியாற்றுகிற அதிகாரிகளும், ஊழியர்களும் எங்கெல்லாம் ஒருங்கிணைந்து செயல்படுகிறார்களோ, அங்கே முறையான பணிகளை மேற்கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் வருகின்ற சில செய்திகள் வருத்தம் அளிப்பதாக இருக்கின்றன.

திருவொற்றியூரில் நகராட்சித் தலைவர் அந்த அவைக்குள்ளேயே தாக்கப்படுகிறார். திண்டுக்கல்லிலே தலைவர் ஊழியரைத் தாக்குகிறார் என்ற செய்திகளெல்லாம் உண்மையிலேயே மிகுந்த வேதனை அளிக்கக்கூடியது, வருத்தம் அளிக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் தடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக்கு அடுத்ததாக ஒரு பெரும் நகரமாக இருக்கிற மதுரை மாநகராட்சி மிகப் பெரிய நிதி நெருக்கடியில் சிக்கி உள்ளதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, அரசு அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி குடிநீர்த் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டம். இன்னும் தொடங்கப்படாத நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. திருவொற்றியூரில் 80 கோடி ரூபாயில் அறிவிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்படத் துவங்கவில்லை. விரைந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில், களியக்காவிளை, ஏழுதேசம், கொல்லங்கோடு ஆகிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக 16.25 கோடி ரூபாயில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்தப் பணி இன்னும் துவங்காமல் இருக்கிறது. உடனடியாக அதைத் துவங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் ஒரு மிகக் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் ஆங்காங்கே தன்னெழுச்சியாக, சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 10 நாள், 15 நாள், சில இடங்களில் 20 நாளுக்கு ஒரு முறை தண்ணீர் விநியோகம் செய்கிற நிலைகூட இருக்கிறது. ஆகவே, இந்த வறட்சிக் காலத்தில் 5 ரூபாய்க்கு ஒரு குடம் தண்ணீர் விலைக்கு வாங்குகிற ஒரு நிலை தமிழகத்தில் சில இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில் இதில் தலையிட்டு, குடிநீர்ப் பிரச்சினைக்குரிய தீர்வு காண வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, குடியாத்தம் நகராட்சிக்கும், நாகப்பட்டினம் நகராட்சிக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் இன்னும் துவக்கப்படாத நிலை நீடிக்கிறது. ஆகவே, அரசு அறிவித்த நாகப்பட்டினம், குடியாத்தம் இந்த இரண்டு நகராட்சிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை உடனடியாகத் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பல்வேறு நகரங்களில் பாதாளச் சாக்கடைக்காக சாலைகள் தோண்டப்பட்டு, குண்டும், குழியுமாகக் காட்சியளிக்கின்றன. அந்தப் பாதாளச் சாக்கடைப் பணிகள் மிக மந்தமாக நடைபெறுகிற இடங்களில் முழுமையாக அந்தப் பணிகள் முடிந்தால்தான் சாலைகள் போடப்படும் என்ற நிலையில் பல இடங்களில் குண்டும், குழியுமாக, புழுதிப் படலமாக, திண்டுக்கல் உட்பட பல்வேறு நகரங்களில் இருக்கிறது. ஆகவே, பணி முடிந்த பகுதிகளில் அந்த இடங்களிலே தார்ச் சாலைகள் அமைத்து, பொது மக்கள் படுகிற சிரமங்களுக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர் இணைப்புக்காகவும், பாதாளச் சாக்கடை இணைப்புக்காகவும் சென்னை மாநகராட்சியிலே ஒரு வாடிக்கையாளர், வீட்டு உரிமையாளரிடத்திலே அதற்கான கட்டணம் 100 ரூபாய் என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. ஆனால் மற்ற நகரங்களில் அதற்கான வைப்புத் தொகை என்ற பெயரால் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரை இன்றைக்கு வசூல் செய்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டுக்கும் இடையில் சென்னைக்கு ஒரு மாதிரியும், மற்ற பகுதிகளுக்கு வேறு மாதிரியாகவும் இருப்பது ஏன்? இந்த இடர்பாடுகள் நீக்கப்பட வேண்டும். மற்ற பகுதி மக்களுக்கும் இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

மயான உதவியாளர்கள், அதாவது வெட்டியான் என்று இருப்பவர்களை மயான உதவியாளர் என்று ஒரு பணியிடம் உருவாக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியிலே அந்தப் பணி வழங்கியுள்ளீர்கள். அதற்காக நன்றி. ஆனால் அதைத் தமிழ்நாட்டிலுள்ள இதர நகரப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர் முழுக்க சுகாதாரமாக வைத்துக்கொள்ளக்கூடிய துப்புரவுப் பணியாளர்களுடைய வாழ்க்கை மோசமான நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு கிராமப்புறங்களிலே, பேரூராட்சிப் பகுதிகளில் அல்லது மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளிலேயெல்லாம் கிடைக்கிற ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே அந்தத் துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வைப் பாதுகாக்க, முறையான ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, இன்றைக்கு 49 மூன்றாம் நிலை நகராட்சிகளை உருவாக்கியிருக்கிறீர்கள். நல்லது. ஆனால் அப்படி உருவாக்கப்பட்ட அந்த மூன்றாம் நிலை நகராட்சிகள், பேரூராட்சிகள் என்ற நிலையிலேதான் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கென்று தனி ஆணையர் நியமனம் இல்லை. அதற்கான கூடுதல் ஊழியர்களும் இல்லாத நிலையில், அறிவிப்பு மூன்றாம் நிலை நகராட்சி என்ற நிலையில் இருந்தாலும், பேரூராட்சி என்ற நிலையிலேதான் இன்றைக்கு அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கான ஆணையர்களையும், ஊழியர்களையும் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டினுடைய பிற நகரப் பகுதிகளில் (மணியடிக்கப்பெற்றது) sorry. இப்போதுதான் ஆரம்பித்தேன். நீங்கள் பழைய கணக்கை வைத்துவிட்டீர்கள். அதைத்தான் நான் உங்களிடம் சொன்னேன். இரண்டாவது தடவை கூப்பிடும்போது இருந்த அந்த நேரத்தை வைத்துக்கொள்ளுங்கள். கிட்டத்தட்ட 27 நகராட்சிகளுக்கு ஆணையர்கள் இல்லாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பணியிடங்களில் ஆணையர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மண்டலங்கள் 35 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்டவை. ஆகவே ஏழு மண்டலங்கள் இன்றுள்ள நிலையில் போதுமானதல்ல. அவற்றை அதிகப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராம ஊராட்சியில் தெரு விளக்கு அமைக்கின்றபோது, அதற்கான மின் கம்பங்கள் அமைப்பதற்குக் கூடுதலான கட்டணம் கேட்கிறார்கள். ஆகவே அந்தக் கட்டணத்தை அவர்களால் முழுமையாகச் செலுத்த முடியவில்லை.

அரசே அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மகாத்மா காந்தி கிராமப்புற வேலையுறுதித் திட்டம் இன்றைக்கு 100 ரூபாய் வழங்கிக் கொண்டிருப்பதை உயர்த்தி வழங்குவது நல்லது. ஆனால், தமிழகம் முழுவதும் அதை முறையாக இன்னும் எல்லா இடங்களிலும் அமலாக்காத குறைபாடுகள் இருக்கின்றன. அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப ஆய்வு செய்து, அந்தக் கூலி முறையாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, நகரப் பகுதிகளுக்கும் அதை விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியம் 1972–லே துவக்கப்பட்டது. எண்பது சதமான மக்களுக்குக் குடிநீர் வழங்கக்கூடிய ஒரு நல்ல துறை அது. அது தொடர்ந்து நீடிக்குமா என்ற ஒரு கேள்வி எழுந்து வருகிறது. அந்தத் துறைக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல ஊழியர்களுடைய—ஊராட்சி நலப் பணியாளர்கள், அவர்களுடைய உதவியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், அவர்களுக்குரிய படிகளை இன்றையதினம் முறைப்படுத்த வேண்டும். ஊதிய உயர்வு, இதர சலுகைகள் வழங்க வேண்டும். ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களுடைய கோரிக்கைகளை, அழைத்துப் பேசித் தீர்வு காண வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிப் பகுதிகளில் (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம், தொகுதி சம்பந்தமாக சொல்லி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பெரிய தொகுதி.

திரு. சி. கோவிந்தசாமி: பெரிய தொகுதி, அதனால் இரண்டு நிமிடம் கூடுதலாகக் கொடுங்கள். பெரிய தொகுதி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, முடியாது.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், நான் உள்ளபடியே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநகராட்சியாக உருவாக்கி, அந்த அங்கீகரிக்கப்படாத மனைப்

பிரிவில் வாழுகிற மக்களுக்கு, சாக்கடையின் மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு ஒரு விமோசனம் வேண்டுமென்று கேட்டபொழுது, நம்முடைய துணை முதல்வர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஒரு தீர்வை உருவாக்கி, மாநகராட்சியில் பணம் இல்லாதபொழுது, நாற்பது கோடி ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கி, இன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே சாக்கடையிலிருந்து வந்த மக்களுக்கு ஒரு விடிவு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அந்த மக்களின் சார்பாகவும், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், எனது சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம்.

அதுபோல, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் திருப்பூரையும் சேர்க்க வேண்டுமென்று நம்முடைய துணை முதல்வரிடத்திலே நேரிலே கேட்டிருக்கிறேன். அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய பதிலுரையில் அந்த அறிவிப்பு எல்லாம் வரும் என்ற நம்பிக்கையோடு அதற்கும் சேர்த்து நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்காவது குடிநீர்த் திட்டம், தெற்குப் பகுதியில் ஒரு புதிய பேருந்து நிலையம், நொய்யலாறு, அதனுடைய ஓடைகளைத் தூய்மைப்படுத்துவது, மேம்பாலங்களை அமைப்பது, திருப்பூரினுடைய போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்கு சென்னையைப்போல் சாலை சந்திப்புகளில் சில மேம்பாலங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டு, தருமபுரி மாவட்டம், அரூர் நகரை நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடியுங்கள். இதற்கும், அதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? திருப்பூருக்குக் கேட்டீர்கள், நியாயம். (குறுக்கீடு) சரி, உரையை முடித்து விடுங்கள்.

திரு. சி. கோவிந்தசாமி: முடித்துவிட்டேன். ஆகவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு, இந்த வாய்ப்பைத் தந்த உங்களுக்கு நன்றி சொல்லி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 12–30

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டு துறைகளுக்கும் கிட்டத்தட்ட ரூ.13,266,65,16,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்காண்டு உள்ளாட்சித் துறைக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படுவது ஒரு நல்ல அறிகுறியாக நான் பார்க்கிறேன். அதிலே உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இதிலே தனித்த கவனம் செலுத்தி அந்தத் துறையினுடைய பணிகளை விரைவுபடுத்துவதற்காக, வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்ற அதே சிந்தனையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார் என்பதற்கான வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக துணை முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அவர் வருங்காலங்களிலே ஓர் அரசியல் கட்சி என்ற முறையில், ஓர் அரசியல் நாகரிகம் கருதி என்னுடைய கருத்து, எதிர்காலத்தில் ஓர் இளம் தலைவர் நாட்டுக்குத் தேவை என்ற வகையில் உருவாகியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அவரை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். சுயநலம் என்ற முறையில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடமும், மரியாதைக்குரிய பேராசிரியர் போன்றோர்களிடமும் கருத்துகளை விவாதிப்பது அல்லது மோதுவது என்பதில் கொஞ்சம் தயக்கமும், தேக்கமும் இருக்கின்றது. இளம் தலைவர் வந்துவிட்டால் அதிலே அந்தக் கருத்துகளை எங்களைப் போன்றவர்கள் வேகமாக எடுத்துப் பேசுவதற்கும், கருத்துகளைச் சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். அவர் வளர வேண்டும் என்று வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன்.

